என்றும். அவனோடு ஸ்நேகம் செய்துகொண்டு அவனுக்குள்ள குறையை ராமர் தீர்த்துவைத்தால், அவன் எப்படியாவது ஸீதையை ராமரிடம் கொண்டு சேர்ப்பான் என்றும், போகும் வழியில் மதங்க வநம் இருக்கிற தென்றும், அதில் பகவதாராதனை செய்துகொண்டு மதங்கரது சிஷ்யர்களிருந்தார்கள் என்றும், பின்பு அவர்கள் பரமபதம் அடைந்துவிட்டார்கள் என்றும், அவர்களுக்குப் பணிவிடை செய்துவந்தவளும், ராமரது வரவை எதிர்பார்த்திருந்தவளுமாகிய சபரி என்ற ஸந்யாஸினி ஒருத்தி பம்பாஸாஸ் என்ற ஏரி அருகில் இருக்கிறாள் என்றும், ராமருக்கு ஹிதமாயிருக்கும் ஸங்கதிகளைச் சொல்லிவிட்டு, கபந்தன் திவ்ய புருஷனாகித் தன திருப்பிடம் சென்றான்.

வினா 38.—ராமர் சபரியின் ஆச்ரமம் செல்ல, அங்கு என்ன நடந்தது ?

விடை.—சபரி ராமரைக் கண்டதும் மிகுந்த ஸந்தோஷமடைந்து, அவர் சித்ரகூடம் வந்தார் என்ற செய்தி கேட்டதுமுதல், அவருக்காகத் தான் நல்லவை என்று சேர்த்துவைத்திருந்த பழங்களைக் கொண்டு வந்து மிகுந்த அன்புடன் அவருக்கு ஸமர்ப்பித்தாள். இதை ராமர் அங்கீகரிக்க, சபரி தனது குருக்களாகிய மதங்க சிஷ்யர்கள் போயிருக்கும் இடத்திற்குத் தானும் போக ராமரிடம் அநுமதிபெற்று, தீயில் முழுகி, ராம ஸந்நிதானத்திலேயே சரபங்கர்போல் பரமபதத்தை அடைந்தாள். பின்பு ராமலக்ஷ்மணர்கள் பம்பா ஸரஸைநோக்கிப் புறப்பட்டார்கள்.

4. கிஷ்கிந்தா காண்டம்

மூன்றுரு வெனக்தணை மும்மை யாமுதற்
றோன்றுரு வெவையுமிம் முதலைச் சொல்லுதற்
கேன்றுரு வமைந்தவு மிடையி னின்றவர்
சான்றுரு வுணர்வுனுக் குவந்த தாயினான்.

வினா 1.—சபரியின் ஆச்ரமம்விட்டு ராமர் எங்கு சென்றார்? அங்கு என்ன விசேஷம் நடந்தது?

விடை.—ராமலக்ஷ்மணர்கள் ஸுக்ரீவனிருக்கும் ரிச்யமூக பர்வதத்தை நோக்கிப் புறப்பட்டுப்போகையில் வழியில் பம்பா ஸரஸின் கரை வந்துசேர்ந்தனர். அங்கு ஸுகமாய் வீசும் காற்றையும், அழகிய தாமரை முதலிய நீர்ப்பூக்கள் நிறைந்த ஏரியின் தெளிவான தண்ணீரையும், ஏரிக்கரையில் உல்லாஸமாய் விளையாடும் பட்சிகள் ம்ருகங்கள் முதலியவைகளையும், சுற்றுமுற்றுமுள்ள ரமணீயமான காட்சிகளையும் கண்டவுடன், ராமருக்கு ஸீதையின் ஞாபகம் வந்துவிட்டது; அவள் தன்னருகிலிருந்து சுற்றிலுமுள்ள அழகை நோக்கி ஆநந்திக்காது, ராவணனது வீட்டில் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதைப்பற்றி ராமர் வெகுவாக ப்ரலாபித்தார். அப்பொழுது லக்ஷ்மணர், 'வெகு தைர்யமாய் ஸீதையைத் தேடுவதில் நாம் முயற்சி செய்ய வேண்டுமே ஒழிய, இவ்வாறு துக்கிப்பதில் பயன் ஒன்றுமில்லை; ரிச்யமூக பர்வதம் போவோம்' என்று

சொல்லி ராமரைத் தேற்றி அழைத்துக்கொண்டு ரிச்யமூக மலையை நோக்கிப் புறப்பட்டார்.

வினா 2.—மலை அடிவாரத்தில் வரும் ராம லக்ஷ்மணர்களைக் கண்டதும், மலைமேலிருந்த ஸுக்ரீவன் கதி என்னவாயிற்று? அவன் அப்பொழுது என்ன செய்தான்?

விடை.—மலை அடிவாரத்தில் தேவதைகளைப் போன்ற உருவத்தோடு வில் அம்பு முதலியவைகளை உடையவராய் வெகு கம்பீரமாய் வரும் ராம லக்ஷ்மணர்களைக் கண்டதும், அவர்கள் தன் தமையனாகிய வாலியால் அனுப்பிவிக்கப்பட்ட தூதர்கள் என்று பயந்து, ஸுக்ரீவன் ரிச்யமூகமலையைவிட்டு மலயபர்வதம் என்ற அடுத்த மலைக்கு ஓடிப்போய் ஒரு குகையில் ஒளித்துக்கொண்டான். அங்கு ஸுக்ரீவனோடு வாஸஞ்செய்துவந்த ஹநுமார் முதலிய மந்த்ரிகளும் வந்துசேர்ந்தார்கள். அப்பொழுது ஹநுமார் ஸுக்ரீவனுக்கு அவ்வளவு பயம் இருக்கக்கூடாதென்றும், அவர்கள் இன்னார் என்று அறிந்தபின்பு தாம் செய்ய வேண்டியதைச் செய்யலாமென்றும் சொல்ல, ஸுக்ரீவன் அவர்கள் இன்னாரென்பதையும் அவர்கள் நோக்கம் இன்னதென்பதையும் அறிந்துவரும்படி ஹநுமாரையே அனுப்பினான்.

வினா 3.—வாலியினிடத்தில் ஸுக்ரீவனுக்கு இவ்வளவு பயம் ஏன் இருந்தது?

விடை.—ஸுக்ரீவன் ஒரு ஸமயத்தில் சிற்சில குறிப்புகளால் வாலி இறந்துபோனதாக எண்ணி, வெகு துக்கத்தை அடைந்து தன் தமையனுக்குச்

செய்யவேண்டிய கடன்களைச் சாஸ்த்ரப்படி மிகுந்த பக்தியோடு முடித்துவிட்டு, கிஷ்கிந்தை வர, அங்குள்ளவர்கள் எவ்வாறோ ஸங்கதியை அறிந்துகொண்டு ஸுக்ரீவனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்தனர். ஸுக்ரீவன் கொஞ்சகாலம் அரசாண்டு வருகையில், வாலி தான்செய்த சண்டையை முடித்துவிட்டு, கிஷ்கிந்தை வந்து, தன் தம்பி அரசாளுவதைக்கண்டு வெகு கோபத்தை அடைந்தான். ஸுக்ரீவன் தனது ராஜ்யத்தைத் தன் தமையன் பாதங்களில் ஸமர்ப்பித்துவிட்டுத் தான் அறியாதுசெய்த பெரும் பிழைக்காக மன்னிக்கவேண்டும் என்று மஹா விநயத்துடன் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். வாலிக்குக் கோபம் அடங்காததால் ஒரு ஸபை கூட்டி, அதில் ஸுக்ரீவனை அவமதித்து, அவனது அரைத்துணி தவிர பெண் சாதி முதலிய மற்றையவைகளையெல்லாம் பிடுங்கிக்கொண்டு, அவனைத் துரத்தியடித்தான். இந்த அநியாயம் பொறுக்கமாட்டாது ஹநுமார் முதலிய சில முக்யக் குரங்குகள் ஸுக்ரீவனோடு ஓடத்தலைப்பட்டு எங்கு சுற்றியும் அங்கு வாலியின் பயந்தீராததுகண்டு, கடைசியில் அவர்கள் ரிச்யமூகமலை வந்து அங்கு ஒளித்துக்கொண்டனர். இதனால்தான் வாலி விஷயத்தில் ஸுக்ரீவனுக்கு இவ்வளவு பயம்.

வினா 4.—எந்த ஸந்தர்ப்பத்தில் வாலி இறந்ததாக ஸுக்ரீவன் எண்ணும்படி நேரிட்டது? அப்பொழுது ஸுக்ரீவன் என்ன செய்தான்?

விடை.—வாலி ஒருநாள் இரவில் அந்தப்புரத்தில் உறங்குகையில், துந்துபி என்ற அஸுரனது

பிள்ளையாகிய மாயாவி என்ற அஸுரன் வாலியைப் போருக்கு அழைத்தான். வாலி விரைவில் எழுந்து, ஸ்த்ரீகள் சொல்லையும் கேட்காது ஸுக்ரீவனை அழைத்துக்கொண்டு சண்டைக்குப் புறப்பட்டு மாயாவியைத் துரத்தினன். அவன் பயந்து ஒரு குகையில் புகுந்துவிட்டான். வாலி ஸுக்ரீவனைத், தான் வரும் வரையில் குகை வாயிலில் இருக்கும்படிச் சொல்லி விட்டு, உள்ளேபோய் ஒரு வருஷம் வரையில் மாயாவியைத் தேடிப், பிறகு முடிவில் அவனைக் கண்டுபிடித்து அவனையும் அவனது பரிவாரங்கள் எல்லாவற்றையும் கொன்றுவிட்டான். அப்பொழுது ஒரு கூக்குரல் உண்டாகி, குகை வாய்வழியாய் ரக்தம் பெருகியது. அஸுரர்களது ரக்தத்தைக்கண்டு வாலியின் சப்தத்தைக் கேட்காத ஸுக்ரீவன் வாலி இறந்தான் என்று எண்ணி வெகு துக்கத்தோடு குகையின் வாயை ஒரு பெரும்பாறையால் மூடிவிட்டுக் கிஷ்கிந்தை சென்றான். குகை முழுவதும் இந்த ரக்தம் இறங்கி வழி உண்டானதும், வாலி வெளியே வருவதற்கு வருங்கால், குகைவாயிலில் இருந்த கல்லைக்கண்டு தன்னாலியன்றமட்டும் அதைப் புரட்டிப்பார்த்தான். சில நாள் புரளாதிருந்தது. பிறகு ஒருவாறு அதை ஒதுக்கிவிட்டுத் தான் வெளியே வந்து கிஷ்கிந்தை அடைந்தான்.

வின 5.—கிஷ்கிந்தைக்கருகில் இருந்த ரிச்யமூக மலையில் ஸுக்ரீவன் பயமற்று இருக்கக் காரணம் என்ன?

விடை.—முன்னொரு காலத்தில் துந்துபி என்ற

ராக்ஷஸன், கொழுப்படைந்து, ஸமுத்ரம், ஹிமயமலை முதலியவைகளைச் சென்று யுத்தத்திற்கழைக்க அவைகள் கிஷ்கிந்தையில் இருக்கும் வாலியே அவனுக்குத் தகுந்தவன் என்றன. உடனே அவன் ஒரு கடா உருக்கொண்டு கிஷ்கிந்தை வந்து, வாலியைப் போருக்கழைத்தான். அப்பொழுது வாலி அவனோடு கோரயுத்தம் செய்து, அவனைக் கொன்று ரக்தத்தோடு அவன் தேகத்தை அநேகந் தூரம் சுழற்றி எறிந்தான். அது ரிச்யமூகமலைச் சாரலிலிருந்த மதங்காச்ரமத்தருகில் வந்துவிழுந்தது. அப்பொழுது ரிஷி, 'இவ்வாறு நமது ஆச்ரமத்தை அசுத்தப்படுத்தியவன் இங்கு வந்தால், அவன் உடனே இறக்கட்டும்' என்று சபித்தார். இந்தச் சாபத்தால் வாலி அங்கு வருவதற்கு முடியாமற்போக, ஸுக்ரீவன் தனது பரிவாரங்களோடு வாலியின் பயம் அதிகமின்றி, அங்கு வஸித்தான்.

வினா 6.—இவ்வாறு வாலிக்காகப் பயந்திருந்த ஸுக்ரீவன் அனுப்புவித்த ஹநுமார், மலை அடிவாரத்தில் வந்துகொண்டிருந்த ராமலக்ஷ்மணர்களிடம் வந்து என்ன செய்தார்?

விடை.—போகும் வழியில் ஒரு தபோமுனி போன்ற ரூபத்தைத் தரித்துக்கொண்டு ஹநுமார், ராமலக்ஷ்மணர்களிடம் வந்து, 'நீங்கள் யார், இங்கு எதற்காக வந்தீர்கள், உங்களைப்போன்ற திவ்ய புருஷர்களுக்கு இக்காட்டில் உலாவும்படியான கதி வருவானேன்?' என்று வெகு விநயத்துடன் அவர்கள்

யோகக்ஷேமங்களை விசாரித்தார். அப்பொழுது லக்ஷ்மணர் தாம் காட்டிற்கு வரவேண்டிய காரணம் முதலியவைகளை எடுத்துக்கூறி, தாங்கள் ஸீதையைப் பறிகொடுத்ததையும், அவளிருக்கும் ராவணனது இடத்தைத் தேடி அறியவல்லவன் ஸுக்ரீவன் என்று தான் கபந்தன் என்னும் ராக்ஷஸன் மூலமாய்க் கேள்விப்பட்டதையும், அதன்மேல் ஸர்வலோகநாதனான ராமர் ஸுக்ரீவனோடு இந்த விஷயமாய் ஸ்நேகஞ்செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்திருப்பதையும், விஸ்தாரமாக ஹநுமாருக்குத் தெரிவித்தார்.

வினா 7.—உடனே ஹநுமார் என்ன செய்தார்?

விடை.—ராமலக்ஷ்மணர்களது பெருந்தன்மையும் நல்ல எண்ணமும் வெளிப்பட்டதும், அவர்களுக்கு ஸுக்ரீவன் வாலியால் பட்டபாடுகளையும், தன் பெண்சாதி முதலியவைகளை இழந்து அவன் படுங் கஷ்டங்களையும் சொல்லி, அவனும் ராமலக்ஷ்மணர்களோடு ஸ்நேகம் செய்துகொள்ளத் தயாராய் இருப்பதாகவும் தெரிவித்தார். அதன்பின்பு ஹநுமார் தாம் ஸுக்ரீவனது மந்த்ரி என்பதை வெளியிட்டு, தமது வானர ரூபத்தை எடுத்துக்கொண்டு, ராமரது குணநிசயங்களில் ஈடுபட்டு, அவருக்கு ஊழியம் செய்பவராய் இருப்பதாகத் தம்முள் தீர்மானஞ்செய்துகொண்டார். உடனே ஹநுமார் அவர்களைத் தமது தோளில் தூக்கிக்கொண்டு ஸுக்ரீவன் ஒளிந்திருக்கும் மலயபர்வத குஹையருகில் கொண்டு வந்துவிட்டார்.

வினு 8.—அங்கு ஸுக்ரீவனுக்கும் ராமருக்கும் என்ன நடந்தது?

விடை.—ஹநுமார் ராமலக்ஷ்மணாது ஜோக்கத்தை ஸுக்ரீவனுக்கு வெளியிட்டவுடன் அவனுக்குத் தைர்யம் வர, அவன் குஹையைவிட்டு வெளியில் வந்தான். அப்பொழுது ராமரும் ஸுக்ரீவனும் கலந்து, கொஞ்சநேரம் தமது பூர்வ ஸங்கதிகளைப் பற்றிப் பேசிவிட்டு அக்நி ஸாக்ஷியாய், 'ஸுகதுக்கங்களை நாமிருவரும் சேர்ந்தே அனுபவிப்போம்' என்று சொல்லி ஸ்நேஹிதம் செய்துகொண்டார்கள். அப்பொழுது ராவணனுக்கும் வாலிக்கும் ஸீதைக்கும் இடக்கண்கள் துடித்தனவாம். (புருஷர்களுக்கு இடக்கண் துடித்தால் அசுபஸூசகமும், ஸ்த்ரீகளுக்கு இடக்கண் துடித்தால் சுபஸூசகமுமாம்) முதலில் ராமர் வாலியைக் கொன்று தனக்கு க்ஷேமம் உண்டாகும்படிச் செய்தால், பின்பு தான் அவருக்கு எப்படியாவது ஸீதையை அழைத்துக் கொடுப்பதாக ஸுக்ரீவன் சொன்னான். உடனே ராமர் அவ்வாறே செய்வதாக ஸுக்ரீவனுக்கு வாக்குக் கொடுத்தார்.

வினு 9.—இதன் பின்பு ராமருக்கு அங்கு என்ன தெரியவந்தது?

விடை.—ஸீதை விஷயமாய் ராமர் ஸுக்ரீவனிடம் பேசிவருகையில், ஸீதை போகும்பொழுது கீழே எறிந்துவிட்டுப்போன நகைமுடிச்சை அவன் ராமர் முன் வைத்து, தான் ஸீதையை ராவணன் கொண்டு போகையில் பார்த்ததாகச் சொன்னான். அதைக்

கண்டதும் ராமருக்கு அடங்காத் துக்கம் வர, கொஞ்ச நேரம் துக்கக்கடலில் ஆழ்ந்திருந்து கடைசியில் ஸுக்ரீவனல் தேற்றப்பட்டுத் தேறுதலை அடைந்தார்.

வினு 10.—ஸுக்ரீவன் வாலியை ராமர் கொல்லத் தக்க சக்தியுடையவர் என்று எவ்வாறு தெரிந்து கொண்டான்?

விடை.—நான்கு ஸமுத்ரத்திற்குக் கொஞ்சநாழிகையில் போய்வரும் சக்திவாய்ந்த வாலியை, ராமருக்குக்கொல்லுந் திறனுண்டு என்பதை இரண்டு விஷயங்களால் ஸுக்ரீவன் அறிந்துகொண்டான். வாலி கொன்று எறிந்திருந்த துந்துபியினது எலும்பு, மலையாக அங்கு அருகே இருக்கக்கண்டு அதைத் தூக்கி 200-தநுஸ் தூரம் எறியும்படி ராமரை ஸுக்ரீவன் வேண்டிக்கொள்ள, அவர் அவனுக்குத் தம்மிடம் நம்பிக்கை வருவதற்காக அந்த எலும்பை எடுத்து 10 யோஜனைதூரம் விட்டெறிந்தார். அதன் பின்பு, வாலி ஒரே அம்பினலெய்து துளைக்கும் வழக்கமாயிருந்த ஏழு ஸால விருக்ஷங்களை ஸுக்ரீவன் ராமருக்குக் காண்பித்து, அவைகளில் முதல் மரத்தை நோக்கி அம்பெய்து எல்லாமரத்தையும் துளைக்கும்படிச் சொன்னன். ராமர் அவ்வாறே செய்தார். இந்த இரண்டு விசித்ர கார்யங்களைக் கண்டதும், ராமர் வாலியைக் கொல்லும் சக்திவாய்ந்தவர் என்று ஸுக்ரீவன் தெரிந்துகொண்டான்.

வினு 11.—இதன் பின்பு ஸுக்ரீவன், என்ன செய்தான்?

விடை.—ராமலக்ஷ்மணர்களுக்கு ஸுக்ரீவன், வாலி தன் விஷயத்தில் செய்த அநியாயத்தையும், தன் பெண்சாதியை அபகரித்துக்கொண்ட அநியாயத்தையும், தன் பூர்வ வ்ருத்தாந்தம எல்லாவற்றையும் ஆதிமேயாடந்தமாகச் சொன்னான். இதன் பின்பு, அன்றைபதினமே வாலியைக் கொன்றுவிட்டால் நலமாய் இருக்கும் என்று ஸுக்ரீவன் வேண்ட, ராமலக்ஷ்மணர்கள், ஹநுமார் ஸுக்ரீவனது இதரவாநரர்கள், ஆக எல்லோரும் புறப்பட்டுக் கிஷ்கிந்தை வந்தார்கள். ஸுக்ரீவன் வாலியைச் சண்டைக்கு அழைப்பதற்காக ஒரு பெரிய அட்டஹாஸஞ்செய்து கர்ச்சித்தான்.

வினு 12.—அப்பொழுது ஸுக்ரீவனுக்கும் வாலிக்கும் உண்டான சண்டை எவ்வாறு முடிவுபெற்றது?

விடை.—அப்பொழுது வாலிக்கும் ஸுக்ரீவனுக்கும் உண்டான சண்டையில் ஸுக்ரீவன் தோல்வியடைந்து ஓடத்தலைப்பட்டான். வாலி அவனை வெகுதூரம் துரத்திச்செல்ல, அவன் ரிச்யமூகமலை அருகில் போய்விட்டபடியால், வாலி அவனைப் பின்தொடர்ந்து போகமுடியாது திரும்பிவிட்டான்.

வினு 13.—ராமர் ஏன் ஸுக்ரீவனுக்கு அன்று ஸஹாயம் செய்யவில்லை?

விடை.—வாலியும் ஸுக்ரீவனும் சண்டை செய்யும்போது ராமருக்கு அவர்கள் இருவருள் வாலி இன்னான் என்று அறியமுடியவில்லை. அவர்கள் இருவரும் ஒரே மாதிரியான உருவத்தோடிருந்தார்கள். ஆகையால், வாலியைக் கொல்லப்போய் ஸுக்ரீவன்

இறக்கும்படியாக வந்தால் மிகுந்த துக்ககரமாய் இருக்குமே என்ற எண்ணத்தால், அன்று ராமர் தமது பாணத்தை விடாதிருந்தார். ஆகையால்தான் ஸுக்ரீவன் அன்று அடிபட்டு ஓடும்படியாயிற்று.

வின 14.— இவ்வாறு தோல்வியடைந்ததும், ஸுக்ரீவன் என்ன செய்தான்?

விடை.—ராமர் செய்ததையும், அதனால் தான் தோல்வியடைந்ததையும் எண்ணி எண்ணி, ஸுக்ரீவன் துக்கிக்கலாயினன். அப்பொழுது ஹநுமார், ராமர், லக்ஷ்மணர் எல்லோரும் அன்று வாலியைக் கொல்ல முடியாததற்குத் தகுந்த காரணங்களைச் சொல்ல, ஸுக்ரீவன் தேறுதலடைந்து மறுநாள் மறுபடியும் வாலியோடு யுத்தஞ்செய்யப் போவதாகத் தீர்மானித்தான். மறுநாள் யுத்தத்திற்குப் புறப்படுகையில் ராமர் ஸுக்ரீவன் கழுத்தில் ஒரு காட்டுப் பூமாலையைப் போட்டுவிட்டார். அன்று ராமர் முதலியோரால் பின் தொடரப்பட்டு, ஸுக்ரீவன் கிஷ்கிந்தை வந்து வாலியைச் சண்டைக்கழைத்தான்.

வின 15.—ஸுக்ரீவனோடு சண்டைசெய்ய வெகு ஆவேசத்தோடு எழுந்த வாலியை, யார் அப்பொழுது என்ன காரணத்தால் தடுத்தது? பின்பு வாலி என்ன செய்தான்?

விடை.—வாலியின் பெண்சாதியாகிய தாரை என்பவள் அப்பொழுது தன் கணவனைச் சண்டைக்குப் போகக்கூடாதென்று தடுத்தாள். தான் தன் பிள்ளை அங்கதனிடமிருந்து ரிச்யமூக பர்வதத்தில் தசரதர் பிள்ளையாகிய ஸ்ரீராமர் வந்து ஸுக்ரீவனோடு ஸ்நேகி

தஞ்செய்துகொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டதாக வும், அவர் ஸஹாயத்தை வைத்துக்கொண்டு, தான் ஒருதரம் தோல்வியடைந்தும் மறுபடியும் ஸுக்ரீவன் தைர்யமாய்ச் சண்டைக்கு வந்திருப்பதாகவும், ஆகை யால் ராமபாணத்திற்கு இரையாகாது ஸுக்ரீவனை யுவ ராஜாவாக்குவதே நலம் என்பதாகவும், தாரை எவ் வளவோ வாலிக்குப் புத்தி சொல்லிப்பார்த்தாள். வாலி முரட்டுத்தனமாய், தான் ஸுக்ரீவன் விஷயத் தில் செய்த அநியாயங்களைக் கவனியாது, 'நானும் என் தம்பியும் சண்டையிடுங்கால் அந்தத் தர்மாத்மா வான ராமர் ஏன் குறுக்கே விழுவார்? அவர் அவ்வாறு அநியாயஞ்செய்யத் துணியார். ஆகையால் நான் ஏன் ராமருக்குப் பயப்படவேண்டும்' என்று தாரைக்கு ஸமாதானம் சொல்லிவிட்டு ஸுக்ரீவனோடு சண்டைக் குப் புறப்பட்டான்.

வினா 16.—அன்று நடந்த சண்டை எவ்வாறு முடிவுபெற்றது?

விடை.—வாலிக்கும் ஸுக்ரீவனுக்கும் அப்பொ ழுது கோரமான சண்டை நடந்தது. ஸுக்ரீவனும் தன்னால் இயன்றமட்டும் வாலியை ஜயிக்கப்பார்த் தான். கடைசியில் வாலியின் கை ஓங்க, ஸுக்ரீ வனுக்கு வரவர பலம் குறைந்துகொண்டும், களைப்பு அதிகமாய்க்கொண்டும் வந்தது. இதை அறிந்து, செடிமறைவில் இருந்த ராமர் தமது வில்லை வளைத்து ஒரு பாணத்தை வாலியை நோக்கி விட்டார். அது பட்டதும் வாலி குத்துயிராய் யுத்தகளத்தில் விழுந் தான்.

வினு 17.—ராமபாணத்தால் அடிபட்டு விழுந்த வாலி ராமனை நோக்கி, என்ன சொன்னான்?

விடை.—குத்துயிராய் யுத்தகளத்தில் விழுந்த வாலி ராமனை நோக்கி, "நான் வேறு ஒருவனோடு மனம் ஊன்றிப் போர்செய்யுங்கால் மூன்றாவதாள் மனுஷ்யராகிய நீர் ஏன் என்னை அம்பெய்து கொல்லவேண்டும்? நீர் இந்த அதர்மமான கார்யத்தைச் செய்ய மாட்டீர் என்றல்லவோ நான் தாரையின் புத்திமதியையும் கேளாது, உமது தர்மபுத்தியை நம்பி இந்தச் சண்டைக்கு வந்தேன். அரசர்கள் ஒரு நாளும் உம்மைப்போல் மனம்போன போக்கெல்லாம் போய் விடக்கூடாது; அவ்வாறு போவார்களேயானால், அவர்கள் அநேகம் ஜனங்களைக் கட்டியாள யோக்யராக மாட்டார்கள். என்னைக் கொல்வதனால் உமக்கு என்ன ப்ரயோஜனம்? என் தோல் மாம்ஸம் முதலியவைகள் உமக்கு உபயோகப்படமாட்டாவே. இவ்வளவு அதர்மத்தில் ப்ரவர்த்திக்கும் பிள்ளை, தர்மாத்மாவான தசரதருக்கு எவ்வாறு பிறந்ததோ? நீர் என்னோடு நேரே சண்டை செய்திருப்பீராயின், உம்மை யமலோகத்திற்கு உடனே அனுப்பியிருப்பேன். என்னை ஒளிந்து அடித்து நீர் எவ்வளவு அதர்மத்திற்கு ஆளாய்விட்டீர்! என்னைக்கொன்று ஸுக்ரீவனுக்கு ராஜ்யங் கொடுப்பதினால் உமக்குண்டாகும் ப்ரயோஜனமாகிய ஸீதையை அடைதல் என்பதை, என்னிடம் நீர் சொல்லியிருப்பீராயின், நான் ராவணனைக் கொல்லாமலே, இப்பொழுதே உம்மிடம் ஸீதைவரும்படிச் செய்திருக்கமாட்டேனோ? எனக்குப் பின் ஸுக்ரீவன் அரசாளவேண்டி

யது எவ்வளவு ந்யாயமோ, அவ்வளவு அநியாயம் நீர் என்னைக் கொன்றது. கேட்போரது மனம் த்ருப்தி யடையும்படியாக உமது செய்கையின் ந்யாயத்தைத் தெரிவியும்'' என்று வெகுவாக அவரது நடத்தையைப் பழித்துப் பேசினன்.

வினு 18.—இந்த தோஷங்களுக்கு ராமர் என்ன பரிகாரம் சொன்னுர் ?

விடை.—'கிஷ்கிந்தை முதலிய ராஜ்யங்கள் யாவும் இக்ஷ்வாகு வம்சத்தரசரைச் சேர்ந்தது. அவ்வம்சத்தில் பரதர் இப்பொழுது ராஜ்யம் ஆண்டு வருகிருர். நாங்கள் அவரைச் சேர்ந்தவர்கள். வெளியில் ந்யாயத்தை ரக்ஷணஞ் செய்துவருபவர்கள். நீ செய்த அநியாயத்திற்காக நாங்கள் உன்னைத் தண்டித்தோம். தம்பி, சிஷ்யன். முதலியோர்களை ஒருவன் ஸொந்தப் பிள்ளைகளைப்போலவே எண்ணவேண்டும் என்பது தர்மம். நீ அதற்கு விரோதமாய், உன் தம்பியிடம் தகுந்தபடி நடந்துகொள்ளாது, கேவலம் கோபாவேசத்தால் உன் தம்பியைத் துரத்தி அடித்துக் கஷ்டப்படுத்தினதுமல்லாமல், அவன் உயிரோடிருக்கையிலேயே அவன் பெண்சாதியையும் கவர்ந்துகொண்டனை. (வானர ஜாதியில் ஸஹோதரர்களில் யாராவது இறந்துவிட்டால் அவன் பெண்சாதியை மற்றைய ஸஹோதரருள் யாராவது பெண்சாதியாகக் கொள்ளுவது தர்மம். ஆனுல் ஒருவன் உயிரோடிருக்கும்பொழுது ஸஹோதரர் இவ்வாறு செய்வது அதர்மம்) இந்த மாதிரி பிறர் பெண்சாதியை அபகரிப்பவனுக்குத் தண்டனை உயிரை வாங்குவதே. மேலும் நான் உன்னைக்கொன்று ஸுக்ரீ

வனுக்கு நன்மை செய்வதாக ஸகல வானரங்கள் முன்பாக வாக்களித்தேன். அதைப் பூர்த்தி செய்வதற்காகவும், நான் உன்னைக் கொன்றேன். இம்மாதிரியான அநியாயக்காரனைக் கொல்லாமல் ஒரு அரசன் இருப்பானாயின், அவனுக்குப் பாபம் ஸம்பவிக்கும். மேலும் இந்தத் தண்டனையால் உனக்கு நன்மையேயொழிய தீமையில்லை. உன் பாபம் இதோடு தீர்ந்துவிட்டது இனிமேல் நீ சுத்தன்தான்,' என்று வாலியின் கேள்விகளுக்கு ராமர் ஸமாதானம் சொன்னார்.

வின 19.—வாலியை ராமர் கொன்றது ந்யாயமா, அல்லது அநியாயமா ? (அனுபந்தம் பார்க்க)

விடை.—வாலிகேட்கும் கேள்விகள் எல்லாவற்றிற்கும் ராமர் தகுந்த விடைகொடுக்கவில்லை. வாலி தம்பியை ஸரியாய் நடத்தாதுஅவன் உயிரோடிருக்கும் பொழுதே அவன் பெண்சாதியை அபகரித்தான். ராமர் தர்மத்தைக் காக்கவந்து ஸுக்ரீவனோடு ஸ்நேகஞ்செய்துகொண்டவர் ; அதற்காக வாலியை அவர் ஸம்ஹாரம் செய்யவேண்டியது ந்யாயமே. ஆனால் ' நான் ஒருவனோடு ஊன்றிச் சண்டையிடுகையில் நீர் ஏன் மறைந்திருந்து என்னை அடித்தீர்,' என்ற வாலியின் கேள்விக்கு ராமர் தகுந்த பதில் கூறவில்லை. அதற்கு ஒருவாறு ஸமாதானம் சொல்லுவதற்காக, ராமர், குரங்கு மான் முதலியவைகளை ஒளிந்து நின்று, மனிதர் கண்ணிவைத்துப் பிடிக்கிறார்கள். அதனால் அவர்கள் அதர்மம் செய்கிறார்கள் என்று சொல்லிவிடலாமா ? என்றுசொல்லி, தாம் மறைந்து அடித்தது அநியாயம் என்பதைக் குறிப்பிக்கும்படி, 'அரசர்கள்

ஜனங்களுக்குப் பொதுவாய் நன்மை விளைவிக்க வந்தவர்கள். அவர்கள் வேலை, எவ்வளவோ கடினமான வேலை ஆகையால் மனித ரூபமாக உலகில் நடமாடும் தேவதைகளாகிய அரசர்களை ஒருநாளும் குற்றங்கூறக் கூடாது' என்று ந்யாயம் சொல்லத் தத்தளிப்பவர் போல் சொல்லி முடித்தார். இந்தவார்த்தைக்கு ராமே இம்மாதிரிப் பொருள் கூறவில்லை. இந்தப் பொருளை எடுத்துக்கொண்டால் பாத்திரந்தான், மேல் க்ருஷ்ணவதாரத்தில் இந்த அநியாயத்திற்காக வாலி வேடனாகப் பிறந்து பகவானை அம்பெய்து கொன்றான் என்பது பொருந்தும். இவ்வாறு கடைசிவார்த்தை சொல்லுங்கால், ராமர் மனதிலேயே, தாம் இருவர் சண்டையிடும்போது, ஒருவனை மறைந்தடிப்பது அநியாயம் என்பது பட்டிருந்தது. இது, மேல் க்ருஷ்ணவதாரத்தின் முடிவை நோக்கின், எளிதில் விளங்கும். ஆகையால் ராமர் வாலியைக் கொன்றது ந்யாயம்; ஆனால் அவன் தன் தம்பியோடுசண்டையிடும்பொழுது அவனை மறைந்து அடித்ததுமாத்திரம் அநியாயம் என்பதற்கு ஸந்தேகமே இல்லை. (அந்தரார்த்தப்படி நோக்கிலோ, இவ்விஷயத்தில் யாதொரு ஆக்ஷேபமும் தோன்றாது. பின்வரும் அனுபந்தத்தைப் பார்க்க.)

வினா 20.—இவ்வாறு தான் மறைந்தடித்தது அநியாயம் என்று தெரிந்திருந்தும், ராமர் ஏன் அதற்குப் பரிகாரம் சொல்ல முயலவேண்டும்? பின்பு வாலி என்ன செய்தான்?

விடை.—ராமர் மனத்திற்கேற்பத் தாம்செய்தது அநியாயம் என்று தோன்றியபோதிலும், மேலும்

கோபத்தால் வாலி வருந்தாது, ஸுகமாய் மரணமடைந்து நற்கதியடைவதற்காகத் தாம் மறைந்தடித்ததற்கும் ஒருவாறு ராமர் பரிஹாரம்சொல்ல முயன்றாரே ஒழியத் தம் குற்றத்தை மறைக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தால் அவர் சும்மாவிருக்கவில்லை. அந்த எண்ணம் இருக்குமாயின், ஸர்வஸ்வதந்த்ரரான ராமர் ஏன் அடுத்த அவதாரத்தில் வாலியின் மனுஷ்ய ஜந்மமாகிய வேடனது அம்பால் பரமபதம் அடையும்படிச் செய்துகொள்ளவேண்டும்? ராமர் இவ்வாறு வாலியினது கேள்விகள் எல்லாவற்றிற்கும் அவனுக்கு த்ருப்திவரும்படி விடைகொடுத்ததும், அவன் மனம் சாந்தமடைய, அவன் ராமரைத் துதிக்கத் தொடங்கினான்.

வினா 21.—வாலி இவ்வாறு த்ருப்தியடைந்த பின்னர் என்னென்ன நடந்தது?

விடை.—வாலி யுத்தகளத்தில் அடிபட்டுவிழுந்ததைக் கேள்விப்பட்டு, தாரையும் அங்கதனும் வந்து வாலியின் தேகத்தைப்பார்த்து மிகவும் கதறினார்கள். அப்பொழுது வாலி, ராமரைநோக்கித் தான் செய்த தப்பிதத்திற்குத் தனக்கு வந்த மரணம் ந்யாயமே என்று சொல்லி, ஸுக்ரீவனை அவர் எவ்வாறு பார்ப்பாரோ அவ்வாறு தனது பிள்ளை அங்கதனையும் பார்த்தருளவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அதன் பின்பு, தன் சிற்றப்பனிடம் அவன் மனங்கோணாது நடந்துகொள்ளும்படி அங்கதனுக்குப் புத்திமதிகள் கூறிவிட்டு வாலி உயிர்விட்டான். அப்பொழுது தாரை அங்கதன் முதலியவர்கள்

துக்கித்ததை நோக்கி, ஸுக்ரீவனுக்கும் துக்கம் வந்துவிட்டது. வரவே, தான் அங்கதனுக்கே கிஷ்கிந்தா நகரத்தை விட்டுவிட்டு, ரிச்யமூகமலைக்குப் போவதாகச் சொன்னான். அப்பொழுது ராமருக்குத் துக்கம் வந்தபோதிலும் அதை ஒருவாறு அடக்கிக் கொண்டு அவர் ஸுக்ரீவனையும் தாரையையும் தேற்ற, பின் நடத்தவேண்டிய க்ரியைகள் விதிப் படி நடத்தப்பட்டன.

வி௵ 22.—இவ்வாறு வாலிக்குச் செய்யவேண்டிய கர்மாதிகள் நடந்தேறியதும், ராமர் என்ன செய்தார்?

விடை.—கர்மங்கள் முடிந்ததும், ஹநுமார் ராமரிடம் வந்து ஸுக்ரீவனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்து விடலாம் என்று தெரிவித்தார். தமது தகப்பனார் உத்தரவிற்கு விரோதமாய்த் தாம் 14-வருஷத்திற்குள் ஒரு நகரத்திலும் ப்ரவேசிக்க முடியாததலால் அவர் ஏற்பாட்டின்பேரில் லக்ஷ்மணரும் ஹநுமாரும் கிஷ்கிந்தை சென்று வெகு கோலாஹலமாக ஸுக்ரீவனுக்குப் பட்டாபிஷேகம் நடத்தி முடித்தனர். எல்லோரும் ராமரை வந்துகாண, அதன் பின்பு ராமர் மழைக்காலம் வந்துவிட்டதைக்கண்டு அக்காலம் முடியுமவரையில் ஸுக்ரீவனை ஸுகமாய்க் கிஷ்கிந்தையில் இருக்கும்படியாகவும் அதன்பின்பு தமது ஸீதையைத் தேட ப்ரயத்நம் செய்யும்படியாகவும் சொல்லி, அவனைக் கிஷ்கிந்தைக்கு அனுப்பிவிட்டார். அவனும் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டு போனான்.

வினு 23.—மழைகாலம் முழுவதும் ராமலக்ஷ்மணர்கள் எவ்வாறு கழித்தனர்? ஸுக்ரீவன் எவ்வாறு கழித்தான்?

விடை.—மழைக்காலம் வந்து, கரியமேகங்களில் மின்னல் பளீர் பளீர் என்று மின்னி, மழைபொழியத் தொடங்க, ஸீதை ஞாபகம் ராமருக்கு அடிக்கடி வரத்தொடங்கியது. அப்பொழுது அவர் பரிதபித்தார். பின்பு லக்ஷ்மணரால் தேறுதலடைந்து, கொஞ்சகாலம் ஸுகமாய் இருந்தார். இவ்வாறு ஒரு விதமாய் மழைகாலம் முழுவதையும் மலைக்குகையிலேயே ராமலக்ஷ்மணர்கள் கழித்தார்கள். ஸுக்ரீவனோ தன் ராஜ்ய விஷயங்களை ஹநுமார் முதலிய நம்பிக்கையான மந்திரிகள் வசம் ஒப்புவித்துவிட்டு மழைக்காலம் முழுவதையும் அந்தப்புரத்தில் ஸ்த்ரீகள் மத்தியில், தான் காட்டில் பட்ட கஷ்டங்களை மறந்து, அவைகள் நன்றாய்த் தன்னைவிட்டு அகலும்படி, சிற்றின்பங்களிலேயே கழித்தான். இவ்வாறிருக்கையில் மழைகாலம் முடிவுபெற்றது. அப்படி இருந்தும், ஸுக்ரீவனுக்குச் சிற்றின்ப ஆசையில் ராமர் விஷயம் ஞாபகமே வரவில்லை. ராமரோ மழைக்காலம் முடிந்ததும், ஸுக்ரீவன் கூடிய சீக்ரத்தில் வந்துவிடுவான் என்று வெகு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

வினு 24.—ஸுக்ரீவனுக்கு ராமகார்யம் ஞாபகம் வரும்படி யார் எவ்வாறு செய்தது?

விடை.—ஸுக்ரீவனது அசிரத்தையைக்கண்டவுடன் ஹநுமாருக்கு மிகுந்த துக்கம் வர, அவனி

டம்சென்று ராமர் விஷயத்தில் அவன் அப்பொழுது செய்யும் அநியாயத்தை எடுத்துரைத்தார். அவனுக்குக் கொஞ்சம் பூலோக உணர்ச்சி வந்தது. உடனே ஸுக்ரீவன், நீலன் என்ற வாநரத்தை அழைத்துத் தனது வாநரஸேனைகள் எல்லாவற்றையும் 15-நாளைக்குள் கிஷ்கிந்தா நகரம் வரும்படி ஏற்பாடுசெய்து, அவைகளைக் கணக்கிடவேண்டுமென்றும், அதற்குள் வாராத வாநரத்திற்கு உயிரை இழத்தலே தண்டனை என்று தெரிவிக்கக் கட்டளையிட்டுத் தான் அந்தஃபுரம் புகுந்து ராஜஸுகங்களில் அழுந்திப்போனான்.

வினா 25.—இதற்குள் ராமர் என்ன செய்தார்?

விடை.—ஸுக்ரீவன் வாராதது கண்டு ராமருக்குத் துக்கம் அதிகரிக்க, அவன் நன்றிகெட்டவன் என்று அவருக்குத் தோன்றியது. உடனே லக்ஷ்மணரை ஸுக்ரீவனிடம் அனுப்பி அவனுக்குத் தமது விஷயத்தை ஞாபகப்படுத்திவரும்படி, ராமர் ஏற்பாடு செய்தார். ராமர் படும் கஷ்டத்தைக் கண்டதும், ஸுக்ரீவனிடம் லக்ஷ்மணருக்கு அதிக கோபம் வர, வெகு பரபரப்போடும் கோபாவேசத்தோடும் ஸுக்ரீவனது அரண்மனை வாயிலில் வந்து, தான் வந்திருப்பதாக ஸுக்ரீவனுக்கு அங்கதன் மூலமாய்ச் சொல்லியனுப்பினார். அங்கதன் அந்தஃபுரம்போய்த் தன்சிற்றப்பன் சிற்றின்பத்தில் லோக ப்ரஜ்ஞையின்றி மூழ்கிக்கிடப்பதைக்கண்டு அவன் காதில் நன்றாய்ப் படும்படி லக்ஷ்மணரது கோபமான வரவைத் தெரிவித்தான்.

வினா 26.—அப்பொழுது ஸுக்ரீவன் அந்தஃபுரத்தில் என்ன நடந்தது?

விடை.—அங்கதன் வந்து லக்ஷ்மணர் வரவைத் தெரிவித்ததும், லக்ஷ்மணரால் ஏவப்பட்ட இரண்டு மந்த்ரிகளும் வந்து அவர் வரவை ஸுக்ரீவனுக்குத் தெரிவித்தனர். சிற்றின்ப மயக்கத்தி லிருந்தபடியால், தான் ஒரு அபராதமும் செய்யாதிருக்கையில் தன்மேரில் லக்ஷ்மணர் கோபங்கொள்ளக் காரணமில்லை என்று ஸுக்ரீவன் வழக்குப் பேசத் தொடங்கினனேயொழிய, லக்ஷ்மணரைப் பார்த்துப் பேசுவதற்கு வேண்டிய ஏற்பாடு ஒன்றையும் செய்யவில்லை. இதைக்கண்ட ஹநுமார், ஸுக்ரீவனுக்கு அவன் ராமர் விஷயத்தில அச்ரத்தையாயிருந்து செய்த அபராதத்தை, நன்ருய்ப்படும்படி எடுத்துச் சொல்லி, லக்ஷ்மணர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளாவிடில், அவர் கோபம் தணியாதென்றும் சொன்னர்.

வினு 27.—ஸுக்ரீவனது அந்தஃபுரத்தில் இவ்வாறு ஸம்பாஷணை நடந்துகொண்டிருக்கையில், லக்ஷ்மணர் என்னசெய்தார்? அவரை, யார் முதலில் ஸந்தித்தது? எவ்வாறு ஸமாதானஞ்செய்தது?

விடை.—கொஞ்ச நாழிகைவரையில் அங்கதன் திரும்பி வருவானென்று எதிர்பார்த்திருந்த லக்ஷ்மணருக்கு, அவன் திரும்பி வராததுகண்டு, கோபம் அதிகரித்துவிட்டது. ராமகார்யமாய் வந்திருப்பதால், அவர் உடனே தைர்யமாய் ஸுக்ரீவனது அந்தஃபுரத்துள் ப்ரவேசித்து, தமது தநுவை டங்காரஞ்செய்துகொண்டே வந்தார். இந்தச் சப்தம் ஸுக்ரீவன் காதில் விழுந்ததும், அவனுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று

உடனே, தாரை, தன் கணவனது உத்தரவின்பேரில், லக்ஷ்மணரை எதிர்கொண்டு வந்து, ஸ்நேஹிதரிடம் கோபித்துக்கொள்ளக்கூடாதென்றும், தாழ்ந்தவரிடம் பெரியோர் கோபிக்கலாகாதென்றும், பெரிய விரக்தி வாய்ந்த பெரியோர்களுக்குக் கோபம் உண்டாவது ந்யாயமன்று என்றும், ரிஷிகளையும் காமம் என்பது அசைத்திருக்கையில் கேவலம் குரங்காகிய ஸுக்ரீவன் அதற்கு ஆளாயிருக்கிறான் என்பதுபற்றி கோபங் கொள்ளலாகாது என்றும், ஸுக்ரீவன் ராமர் செய்த நன்றியை மறவாது, குரங்கு ஸேனைகளைக் கிஷ்கிந்தையில் 15 நாளைக்குள் சேரும்படிக் கொடிய உத்தரவு செய்துதான் அந்தப்புரம் வந்திருக்கிறான் என்றும் சொல்லி, அவரை ஸமாதானப்படுத்தி ஸுக்ரீவன் இருக்குமிடத்திற்கு அவரைக்கொண்டுபோய்விட்டாள்.

வி௲ 28.—ஸுக்ரீவனைக் கண்டதும் லக்ஷ்மணர் என்ன செய்தார்? பின்பு என்ன நடந்தது?

விடை.—தாரை எவ்வளவு சொன்னபோதிலும், லக்ஷ்மணர் கோபம் அடங்காது, ஸுக்ரீவனைக் கண்டதும் படபடப்புடன் அவனை நன்றிகெட்டவன் என்றும் வாலிபோன வழியேபோக ஆசைகொண்டிருக்கிறவனென்று, பலவிதமாகக் கடிந்துகொண்டு ராமகார்ய நிமித்தமாய்ப் பேசினார். அப்பொழுது தாரை, ராமர் விஷயத்தில் ஸுக்ரீவன் எவ்வளவு ஆவல்கொண்டிருக்கிறான் என்றும், அதற்காகத் தன்னையும் மற்றைய ஸ்த்ரீகளையும் கைவிடுவதற்கும் தயாராய் இருக்கிறான் என்றும், வானரஸேனை சேருவதற்காகத்தான் 15-நாள் ஸுக்ரீவன் காத்திருக்கிறான் என்றும் சொல்ல, லக்ஷ்

மணருக்குக் கோபம் தணிந்தது. அப்பொழுது ஸுக்ரீவன், ராமர் தன்னைக் கௌரவப்படுத்துவதற்காகத் தான் தன் ஸஹாயத்தை ஒரு பொருட்டாகக்கொண்டு ராவண ஸம்ஹாரம் செய்ய எண்ணுகிறார் என்று ராமரது பலபராக்ரமத்தைப் புகழ்ந்து பேசி ஸுக்ரீவன் தனது நன்றியறிதலைக் காட்டினான். உடனே லக்ஷ்மணர் ராமரைப் பார்த்துத் தேற்றுவதற்காக ஸுக்ரீவனை வரும்படிசொல்ல, அவன் வாநரர்களைக் கூட்டுவதற்கு, இன்னும் சில வாநரங்களை மறுபடியும் ஏவும்படி ஹநுமாருக்கு உத்தரவுகொடுத்துவிட்டு, ரிச்யமூகமலையை நோக்கிப் புறப்பட்டான்.

வின 29 ரியச்மூகமலைக்கு ஸுக்ரீவன் சென்றதும், அங்கு ராம ஸந்நிதானத்தில் என்ன ஏற்பாடுகள் அவன் செய்தான்?

விடை.—ராமரைக்கண்டு, ஸுக்ரீவன் தான் அவர் விஷயத்தில் செய்த ப்ரயத்நங்களைச் சொல்லிக்கொண்டிருக்கையில், ஸகல வாநரர்களும் கூட்டங் கூட்டமாய் வந்து ராமர் முன் கூடின. உடனே ஸுக்ரீவன் அவர்களை நான்குபாகமாகப் பிரித்து நான்கு திக்கிலும்போய் ஸீதையைத் தேடிவரும்படி அனுப்பினான். அனுப்புகையில், நான்கு திக்கிலும் தேட வேண்டிய இடங்களை எல்லாம், தான் வாலிக்குப் பயந்து ஓடுங்கால் பார்த்திருப்பதால், பார்த்தபடியே வர்ணித்து, குரங்குகளை ஒரு மாதத்திற்குள் தேடித்திரும்பி வரும்படிக்கும், அப்படித் திரும்பாமற்போனால் கொடிய தண்டனைக்குள்ளாகவேண்டி யிருக்குமென்

றும் உத்தரவு செய்தான். எல்லாக் குரங்குகளும் வெகு உத்ஸாகத்தோடு ஸீதையைத் தேடப் புறப்பட்டன.

வினா 30.—ராவணன் ஸீதையைத் தூக்கிப்போன தெற்குத் திக்கை நோக்கி ஸுக்ரீவன் யார் யாரை அனுப்பினான்? எவ்வாறு அனுப்பினான்?

விடை.—தெற்குத் திக்கை நோக்கி ஸுக்ரீவன், ஹநுமார், அங்கதன், நளன், நீலன், ஜாம்பவான் முதலிய வாநர ச்ரேஷ்டர்களை மிகுந்த வாநரக் கூட்டங்களோடு அனுப்பினான். இவர்கள் போகு முன், ஸுக்ரீவன் ஹநுமாரை ராமரிடம் அழைத்துப்போய், அவரது பராக்ரமம் முதலியவைகளை எடுத்துச் சொல்லி, அவரே ஒருவேளை ஸீதையைக் கண்டாலும் காணுவார் என்றும் எடுத்துரைக்க, ராமர் ஹநுமாரிடம் தன் கணையாழி மோதிரத்தைக் கொடுத்து, அதை ஸீதையிடம் காட்டினால் அவள் ஸமாசாரம் ஏதாவது தைர்யமாய்ச் சொல்லிவிடுவாள் என்று சொல்லி, மேலும் ஸீதைக்குப் பூர்ணநம்பிக்கை வரும்படியாக அவளுக்கும் தமக்கும் மாத்திரம் தெரிந்த சில ரகஸ்யங்களையும் அவரிடத்தில் சொல்லியனுப்பினார்.

வினா 31.—தெற்குத் திக்கைத்தவிர மற்றைய மூன்று திக்கிலும் தேடச்சென்ற வாநரர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—மற்றைய மூன்று திக்கிலும் தேடச் சென்ற வாநரர்கள், தம்மால் இயன்றமட்டும் எங்கும் தேடிப்பார்த்தும் ஸீதையைக் கண்டுபிடிக்க முடியாது, வெகு கஷ்டப்பட்டு ஸுக்ரீவன் குறித்த ஒருமாத

காலத்திற்குள் கிஷ்கிந்தைக்கு வந்து சேர்ந்து விட்டார்கள். எல்லோரும், ஹநுமார் முதலியோர் ஸீதையை ராவணன் தூக்கிச் சென்ற திக்கை நோக்கிப் போயிருப்பதால், அவர்களே ஸீதை யிருக்கும் இடத்தை கண்டுபிடித்து வருவார்கள் என்று அபிப்ராயப்பட, அவர்கள் வரவை ராமர் மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்.

வினு 32.—தெற்கே சென்ற ஹநுமார் முதலியோர், ஸீதையை எவ்வாறு தேடிக்கொண்டு புறப்பட்டனர்? போகும் வழியில் என்ன நடந்தது?

விடை.—போகும் வழியிலுள்ள காடுகள் குகைகள் மலைகள் முதலிய இடங்களில் எல்லாம் விடாது புகுந்து, ஸீதையைத் தேடிக்கொண்டே அவர்கள் தெற்கு நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். வழியில் ஒரு குகையில் ஒரு பெரிய அஸுரன் உட்கார்ந்திருப்பதைக்கண்டு வாநரர்கள்யாவரும் சண்டைக்குத் தயாராயினர். அந்த அஸுரன் சண்டைக்காக எழுந்துவந்ததும், அவனை, அங்கதன் ஒரே அடியில் மாய்த்துவிட்டான். பின்பு அந்தக் குகை முழுவதும் ஸீதையைத் தேடிவிட்டு வாநரர்கள் பின்னும் தெற்கே சென்றனர்.

வினு 33.—போகும்வழியில் இவர்களுக்கு என்ன ஆபத்து வந்தது? அது எவ்வாறு நீங்கிற்று?

விடை.—ஸீதையைத் தேடிக்கொண்டு தெற்கே போகையில் இவர்களுக்குத் தாகமும் பசியும் அதிகரித்தன. அப்பொழுது தமக்கு முன்னே, கிளைந்தவையாயும், தாமரை மகரந்தங்களால் சிவப்பு நிறமாகத் தோ

ன்றுவணவாயும் உள்ள பட்சிகள் வெளியே வந்து கொண்டிருக்கும்படியான ஒரு பிலத்வாரத்தை அவர்கள் கண்டு, எல்லோரும் அதனுள் ப்ரவேசித்தார்கள். போகும் வழி மிகவும் இருட்டாயிருக்க, எல்லோரும் அன்றோடே தமக்கு ஆயுள் முடிந்ததென்று பயந்துகொண்டே அதனுள் போய்க்கொண்டிருந்தனர். உள்ளே வெகுதூரம் சென்றும், ஒன்றையும் காணாது, திரும்பி வெளியே வர வழியும் தெரியாது, வாநரர்கள் தத்தளிக்கத் தொடங்கினர். அங்கே சுற்றுமுற்றும் பார்க்கையில், வாநரர்களின் கண்ணில், மணிகள் சந்தனக்கட்டைகள முதலிய அழகிய ஸாமான்கள் தோன்றின. அங்கு ஒரு கரிய மான்தோல் போர்த்துக்கொண்டிருந்த ஒரு ஸந்யாஸினியையும் அவர்கள் கண்டு, அவள் யார் என்று விசாரித்தார்கள். அதற்கு அவள் பதில் உரைக்காதது கண்டு, ஹநுமார் தைர்யமாய் 'நாங்கள் குஹையில் புகுந்தது முதல் மிகுந்த பசி தாகங்களால் வருந்துகிறோம்' என்று சொல்ல, அவள் அவர்களுக்குச் சுற்றுமுற்றுமுள்ள பழம் முதலியவைகளைத்தின்று தண்ணீர் குடிக்கும்படி உத்தரவு செய்தாள். அவர்களுக்குப் பசிதாகம் தணிந்தவுடன், ஸந்யாஸினியின் வேண்டுகோளின்படி அவர்கள் தாங்கள் ராமகார்யமாய்வந்து அந்தக் குஹையுட் புகுந்தவிதத்தைவிஸ்தாரமாக எடுத்துச்சொல்லித்தாங்கள்வெளியே எப்படியாவது போகவேண்டுமென்று கேட்க, அந்த ஸந்யாஸினி அவர்களைக் கண்ணை மூடிக்கொள்ளும்படி செய்து, எல்லோரையும் தெற்கு ஸமுத்ரக்கரை கொண்டுபோய்ச் சேர்த்தாள்.

வினு 34.—அந்தப் பிலம் யாருடையது? அதிலிருந்த ஸந்யாஸினி யார்? அதன் விசேஷம் என்ன?

விடை.—அந்தக் குஹை மயன் என்ற அஸுரத் தச்சனுல் தன் உபயோகத்திற்காக அமைக்கப்பட்ட விசித்ரமான ஒரு வாஸஸ்தானம். அங்கு அவன் வெகுகாலம் தவஞ்செய்துகொண்டிருக்க, அவன் ப்ரம்மதேவர் அநுக்ரஹத்தால் தன் வேலையில் தேர்ச்சியடைந்தான். அங்கு மயன் ஸுகமாய் வாழ்ந்துகொண்டிருக்கையில், அவனுக்கு ஹேமை என்ற அப்ஸரஸ்த்ரீயைக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும் என்ற துர்ஆசைவர, உடனே இந்த்ரன் அவனைத் தனது வஜ்ராயுதத்தால் கொன்று தள்ளிவிட்டான். அப்பொழுது அந்தக் குஹையை ப்ரம்மதேவர் ஹேமைக்குக்கொடுக்க அதை அவள் தனது தோழியாகிய ஸ்வயம்ப்ரபை என்பவளிடம் ஒப்புவித்திருந்தாள். அவள்தான் ஹநுமார் முதலியோர் கண்ட ஸந்யாஸினி. அந்தக் குஹையுள் போனவர்கள் எவரும் திரும்பிவந்ததில்லை. அந்த ஸ்வயம்ப்ரபை என்ற ஸந்யாஸினியின் க்ருபையின்றி ஒருவராலும் அந்தக் குஹையைவிட்டு வெளிவரவே முடியாது.

வினு 35.—தெற்கு ஸமுத்ரக்கரை வந்ததும், வாநரர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—பிலத்தை விட்டு வெளியில் வந்ததும், வஸந்தகால ஆரம்பத்தைப் பார்த்து மயனுற் செய்யப்பட்ட பிலத்திலேயே ஸுக்ரீவன் குறிப்பிட்ட ஒருமாத காலம் முடிந்துபோய்விட்டது என்று வாநரர்களுக்குத் தெரியவந்தது. உடனே அங்கதன், ஸுக்ரீவனி

டம் ஸீதையைக் கண்டுபிடியாது வைத்த வாம்புக்கு ந்து சென்று உயிரிழப்பதைவிட ஸமுத்ரக் கரையில் ப்ராயோபவேசஞ்செய்து (பட்டினி இருந்து) இறந்த லே மேல், என்று தீர்மானித்து அவ்வாறே செய்யத் துணிந்தான். மற்றைய வாநரர்களும் அவ்வாறே செய்ய எண்ணினர்கள்.

விஞு 36 —இந்த ஸமயத்தில் அங்கதனது மனதை யார் எவ்வாறு மாற்றியது? அவனுக்கு யார் எவ்வாறு புத்திமதி கூறி அவனை நல்ல வழிக்குக் கொண்டுவந்தது?

விடை.—இவ்வாறு வாநரர்கள் ப்ராயோபவேசத்திற்குத் தயார் செய்துகொண்டிருக்கையில், தாரன் என்ற வாநரம், அங்கதனுக்கு ஸுக்ரீவன் விஷயத்தில் வெறுப்பு உண்டாகும்படி, 'நாம் கிஷ்கிந்தை போகாது இந்த மயன் குகைகளிலேயே ஸுகமாய் இருந்துவிடுவோம், பின்பு ஸுக்ரீவனது கிஷ்கிந்தைமேல் படையெடுத்துச் சென்று அதையும் வசப்படுத்தினாலும் படுத்துவோம்' என்று சொன்னான். இதனால் அங்கதன் மனம் மாறுதிருப்பதற்காக ஹநுமார் அவனை நோக்கி, 'நீ ஞ கத் தாரன் சொல்லைக்கேட்டு மோசம் போகாதே. நீ இங்கு வேருக ராஜ்யம் ஆளத் தொடங்கினால், உன்னுடன் ஒரு வாநரனும் சேரமாட்டான். ஏனெனில் ஒவ்வொரு வாநரத்திற்கும், வீடு மனைவி முதலிய எல்லாம் கிஷ்கிந்தையி லிருக்கின்றன. மேலும் ராமலக்ஷ்மணர்களும் எனக்கு விரோதியாக, அவர் பாணத்திற்கு நீ அவச்யம் இரையாக வேண்டிவரும். நீ ஸுக்ரீவனை விட்டுப்பிரிய எண்ணினால் உனக்குக் கேடுவரும் என்

பதற்கு ஸந்தேகமில்லை. நீ ஸுக்ரீவனிடம் போய்ச் சேர்ந்தால் உன்னை ஒருவேளை அவன் மன்னித்துவிடுவான்' என்று புத்திமதி கூறி அவனது மனதை ஒருவாறு மாற்றினார்.

வினா 37.—அப்பொழுது அங்கதன் என்ன செய்தான்? வாநரர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—அப்பொழுது ஸுக்ரீவனது கெட்ட நடத்தைகளை எல்லாம் அங்கதன் எடுத்துரைத்து, அவன் தன்னை அவச்யம் கொல்லுவான் என்று தீர்மானம் செய்துகொண்டு ப்ராயோபவேசம செய்வதே நலம் என்று எண்ணினானே ஒழிய, ஸுக்ரீவனுக்கு விரோதமாய்த் தான் ஏற்படவேண்டும் என்ற துராசை கொள்ளவில்லை. உடனே வாநரர்களும் ஸமுத்ர ஜலத்தை ஆசமனம் செய்துவிட்டுக் கிழக்கு நோக்கி உட்கார்ந்துகொண்டு, அப்படியே பட்டினியாக இறப்பதாகத் தீர்மானித்துவிட்டார்கள். அப்பொழுது வாநரர்கள் ஒருவருக்கு ஒருவர் ராம கதையைச் சொல்லிக்கொண்டு காலங்கழிக்கத் தொடங்கினர். அவர்களிற் சிலர், ஜடாயு ராம கார்யமாக ஜநஸ்தானத்தில் இறந்த வைபவத்தைச் சொல்லித் தாம் ராமகார்ய நிமித்தம் ஸமுத்ரக் கரையிலிறப்பது, ஸுக்ரீவாஜ்ஞைக்கு உட்பட்டு இறப்பதைவிடமேல் என்று, பலவாறாக ராம கதையைப் பேசிக்கொண்டு காலங்கழித்தனர்.

வினா 38.—அப்பொழுது வாநரர்களுக்கு என்ன ஆபத்து வந்தது? அது எவ்வாறு நீங்கிற்று?

விடை.—இவ்வாறு வாநரர்கள் பேசிக்கொண்டிருக்கையில், ஸமுத்ரக் கரையிலிருந்த குகையை

விட்டு 'நமக்கு நல்ல இரை அகப்பட்டது' என்று ஸந்தோஷமாய்க் கத்திக்கொண்டு, ஸம்பாதி என்ற இறகு இல்லாத கழுகு வெளியில் மெதுவாய் நடந்து வாநரர்களை விழுங்க வந்தது. அப்பொழுது வாநரர்களுக்கு மிகுந்த பயமுண்டாக, சிலர் கதையை மறந்துவிட்டார்கள். சிலர் ஜடாயு கதையை அத்தருணத்தில் சொல்லிக்கொண்டிருந்தனர். தன் தம்பியான ஜடாயுவின் பெயரைக் கேட்டதும், ஸம்பாதிக்கு இக்குரங்குகளைத் தின்னவேண்டும் என்ற எண்ணம்போக, வாநரர்களுக்குக் கழுகினால் வந்த ஆபத்து நீங்கிற்று.

வினா 39.—அப்பொழுது ஸம்பாதி வாநரர்களை என்ன கேட்டது? அவர்கள் என்னபதில்சொன்னார்கள்?

விடை.—ஸம்பாதி ஜடாயுவின்வ்ருத்தாந்தத்தைச் சொல்லும்படி வாநரர்களைக் கேட்டது. உடனே வாநரர்கள் வெகு உத்ஸாகத்தோடு, ஜடாயு ஜநஸ்தானத்தில் ராமகார்யமாக இறந்ததையும், அதற்கு ராமர் கர்மாதிகள் செய்ததையும், பின்பு ஸீதையைத் தேடுவதற்காக ஸுக்ரீவனிடம் ஸ்நேகஞ்செய்துகொண்டு, வாலியைக்கொன்று அவனுக்கு ராஜ்யம் கொடுத்ததையும் அந்த ஸுக்ரீவன் ஆஜ்ஞைப்படி தாம் ஸீதையைத் தேடவந்த இடத்தில் அவன் குறிப்பிட்ட மாதம் ஒன்று முடிந்ததையும், ஆதலால் ஸீதையைக் கண்டுபிடியாது ஸுக்ரீவன் தண்டனைக்கு உட்படுவதைவிட இறப்பது நலமென்று தாம் தீர்மானித்திருப்பதையும், ஆதியோடந்தமாக ஸம்பாதிக்கும் உரைத்தனர்.

வினா 40.—ஸம்பாதி இவ்வாறு இறகில்லாது இருப்பானேன்?

விடை.—முற்காலத்தில் ஜடாயுவும், ஸம்பாதியும் தம்து சக்தியை வெளியிடுவதற்காக ஸூர்யனை நோக்கிப்போகையில், ஜடாயுவிற்குக் களைப்பு வர, ஸம்பாதி அதைத் தன் இறகால் மறைத்தது. அப்பொழுது அதன் இறகுகள் எறிந்துபோக, ஜடாயுவும், ஸம்பாதியும் கீழே விழுந்தன. ஜடாயு ஜநஸ்தானத்திலும் ஸம்பாதி தெற்கு ஸமுத்ரக் கரையிலும் விழுந்தது.

விஞ 41.—இறகு இழந்து விழுந்த ஸம்பாதி, ஏன் இவ்வளவு காலம் உயிர் தரித்திருந்தது ?

விடை.—ஸமுத்ரத்தருகில் நிசாகரர் என்ற ஒரு ஸந்யாஸி இருந்தார். அவரிடம் ஸம்பாதி சென்று, தனக்குவந்த ஆபத்தைச் சொல்லிக்கொண்டு, தான் உயிர்விட எண்ணியிருப்பதாகச் சொன்னது. அப்பொழுது அந்த மஹான், தமக்கு இறகு கொடுக்கும் சக்தி இருக்கிறதென்றும், கொஞ்ச நாளில் ராமனது பெண்சாதியாகிய ஸீதையை ராவணன் தூக்கிப்போய் அதனால் நாசமடையப் போகிறான் என்றும், அந்த ராவணஸம்ஹாரமாகிற தேவகார்யத்தில், அங்கேயே இருந்து வாக்கு ஸஹாயம் பண்ணுவதற்காக அதற்கு அப்பொழுது இறகு கொடுக்கவில்லை என்றும், அந்த ஸஹாயம் செய்தவுடன், இறகுகள் தாமாகவே உண்டாகும் என்றும், அதுவரையில் ஸம்பாதிக்குத் தூரத்ருஷ்டி இருக்குமென்றும், அநுக்ரஹித்துப் பரமபதம் அடைந்தார். அன்று முதல் ராமகார்யத்தில் ஸஹாயஞ்செய்ய எப்பொழுது தருணம் வாய்க்கும் என்ற ஆவலோடு ஸம்பாதி ஸமுத்ரக்கரையிலுள்ள மலைக்குகையில் உயிர் தரித்திருந்தது.

வினா 42.—ஸம்பாதிக்கு ராவணன் ஸீதையைக் கொண்டுபோன விவரம் முன்னமேயே எவ்வாறு தெரிய வந்தது?

விடை.—ஒருநாள் ஸம்பாதியின் பிள்ளை ஸுபார்ச்வன் என்ற கழுகு, தகப்பனுருக்காக இரை தேடப் போய் இரை ஒன்றும் அகப்படாமல்போக, மாலையில் வெறுங்கையோடு வந்தது. இரை இல்லாது வந்ததன் காரணத்தை ஸம்பாதி கேட்க, அது, தான் ஒரு சிவந்த மேனியோடுகூடிய ராக்ஷஸன் ஒரு ஸ்த்ரீயைக் கொண்டுபோவதைக் கண்டு, தனக்கு நல்ல இரையாய் இருக்கலாம் என்று எண்ணி தான் அந்த அலங்காரனைத் தடுத்ததாகவும், அவன் தன்னை ஸமாதாநம் செய்து விட்டு ஸ்த்ரீயைக்கொண்டு ஓடிப்போய்விட்டதாகவும் அதன் பின்பு அருகே வந்த மஹரிஷிகளால், அவள் தசரதர் பிள்ளையாகிய ராமர் பெண்சாதி என்று அறிந்ததாகவும், பின்பு அவள் மிகுந்த துக்கத்தோடு தனது ஆபரணங்களை வழியே இறைத்துப் போவதைப் பார்த்திருந்ததாகவும், இதனுல்தான் இரைதேட முடியவில்லை என்பதாகவும் நடந்த விஷயங்களை விஸ்தாரமாய்ச் சொல்லிற்று. ஸீதை விஷயமாய் ஸம்பாதிக்கும் முன்னமேயே இவ்வளவுதான் தெரியும்.

வினா 43.—இந்த ஸங்கதிகளை முன்னமே அறிந்திருந்த ஸம்பாதி வாநரர்களிடமிருந்து ராமர் கதையைக் கேட்டதும் என்ன செய்தது? பின்பு என்ன நடந்தது?

விடை.—தனக்கு இறகு முளைக்குங்காலம் வந்துவிட்டதென ஸந்தோஷித்து, வாநரர்களை நோக்கி

ஸம்பாதி, 'ஏ வானர ச்ரேஷ்டர்களே! இதோ தெற்கும் புறத்தில் 100-யோசனைக்கு அப்பால் லங்கைத் தீவிலே அசோக வனத்தில்' ஸீதை வஸிக்கிறாள். என் கண்ணிற்கு நிசாகரர் அநுக்ரகத்தால், அவள் புலப்படுகிறாள். நான் காட்டும் திசையிலே உங்களுள் யாராவது ஸமுத்ரத்தைத் தாண்டிச் செல்வாராயின், ஸீதையை அவர்கள் அசோக வனத்தில் கண்டு வரலாம். உங்கள் சோம்பேறித்தனத்தை விட்டு விடுங்கள். சீக்ரமாய் யாராவது இந்த ஸமுத்ரத்தைத் தாண்டி ராம கார்யத்தை முடியுங்கள். எனக்கு இறகு இல்லாததாலும், கிழத்தனம் வந்து விட்டபடியாலும், என்னால் வாக்ஸஹாயம் ஒன்றுமாத்ரம் ராமர் விஷயத்தில் செய்யமுடியுமே ஒழிய, வேறொன்றும் முடியாது' என்று சொல்லித் தன்னை ஸமுத்ரக் கரையில் கொண்டுவிடும்படி வானரர்களைக் கேட்டுக் கொள்ள, அவர்கள் வெகு ஸந்தோஷத்தோடு அவ்வாறே செய்தனர். உடனே ஸம்பாதி ஜடாயுவுக்காகத் தர்ப்பணம் முதலியவை செய்துவிட்டு வானரர்களுக்குத தன் இறகுபோன விதத்தையும், ராமகார்ய விஷயமாய் காத்திருந்து அதில் வாக்ஸஹாயஞ்செய்தால் உடனே இறகு முளைக்கும் என்றும், அதுவரை தனக்குத் தூரத்ருஷ்டி இருக்கும் என்றும், நிசாகரர் செய்த அநுக்ரஹத்தையும் தன் பிள்ளை மூலமாய் ராவணன் ஸீதையை எடுத்துச் சென்றதை அறிந்ததையும், ஸம்பாதி சொன்னவுடன், தனக்கு இறகுகள் காகரவென்று முளைத்தன. உடனே ஸம்பாதி ஆகாயத்தில் கிளம்பி 'அதோ ஸீதை அசோகவனத்தி லிருக்கிறாள். சீக்ரம்

ஸமுத்ரத்தைத் தாண்டி, வாநரர்களே! ராம கார்யத்தை முடியுங்கள்' என்று சொல்லிக்கொண்டு வெகு ஸந்தோஷத்தோடு பறந்துபோயிற்று.

வின 44.—ஸம்பாதி பறந்து போனதும், வாநரர்கள் ஸமுத்ரத்தைத் தாண்டும் விஷயத்தில் என்ன ப்ரயத்நம் செய்தனர்.

விடை.—வாநரர்களுக்கு ப்ராயோபவேசஞ்செய்ய வேண்டும் என்ற எண்ணம் மாறி ஸந்தோஷமுண்டாக, அங்கதன் அவர்களை நோக்கி 'வாநர ச்ரேஷ்டர்களே, உங்களுள் யார் இந்த ஸமுத்ரத்தைத் தாண்ட வல்லவர் உங்களது சக்திகளின் விசேஷத்தைக்கூசாது தெரிவியுங்கள்' என்று சொன்னான். உடனே சிற்சில வாநரவீரர்கள் தம்மால் 10, 20, 30, 40, 50, 60, 70, 80, யோஜனை தூரங்கள் முறையே தாவ முடியுமென்று சொன்னார்கள். அப்பொழுது ஜாம்பவான் என்ற கரடிராஜன் எழுந்து தனக்குச் சிறுவயதில் அதுபோன்ற அநேக ஸமுத்ரங்களைத் தாண்டவல்ல சக்தி வாய்ந்திருந்ததென்றும், இப்பொழுது கிழத்தனம் வந்துவிட்டபடியால் 90-யோஜனைகள்தான் தன்னால் தாவமுடியும் என்றும் சொன்னான். உடனே அங்கதன் தன்னால் 100-யோஜனை தாவமுடியுமென்றும், தாவிப் போய்விட்டால், திரும்பி வருவது கஷ்டம் என்றும் சொல்ல, ஜாம்பவான், வேலைக்காரிருக்க ஒரு வேலையையும் செய்யலாகாது. ராஜகுமாரன் ஆதலால், தான் தகுந்த குரங்கைப் பார்த்து அந்த வேலையில் ஏவுவதாகச் சொன்னான்.

வின 45.—ஜாம்பவான் யாரை எவ்வாறு இந்த வேலையில் ஏவினன்?

விடை.—ஜாம்பவான், ராமபக்தியும், மஹாசக்தியும் வாய்ந்து ஒன்றும் சொல்லாது ஒரு புறமாய் இருந்த ஹநுமாரிடம் வந்து அவரைத் துதிக்கலாயினன். ஹநுமாரது பிறப்பு, அவர் சிறுவயதில் செய்த அற்புதச் செயல்கள், பெற்ற வரங்கள், முதலியவைகளை எடுத்துச் சொல்லி, ஸமுதரத்தைத் தாண்ட வல்லார் அவர் ஒருவரே என்று ஜாம்பவான் சொல்ல, ஹநுமாருக்குத் தமது பலம் ஞாபகம் வந்தது. உடனே ஸமுத்ரத்தைத் தமது யஜமான் கார்யமாகத் தாண்ட வேண்டுமென்ற எண்ணம் அவருக்குண்டாயிற்று.

வின 46.—இந்த எண்ணந்தோன்றியதும் ஹநுமார் என்னசெய்தார்? வாநரர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—ஹநுமாருக்கு இந்தத் தீர்மானம் வந்ததும், தம் உருவத்தைப் பெரிதாக்கிக்கொண்டு ஸமுத்ரத்தைத் தமது ராமபக்தி விசேஷத்தால் தாண்ட எண்ணி அவர் அருகிலிருந்த மஹேந்த்ரகிரியிலேறினர். அப்பொழுது ஹநுமாருக்கும் பலம் வ்ருத்தியாகி, ராமகார்யம் நன்றாய் முடிவுபெறவேண்டும் என்ற எண்ணத்துடன், ஜாம்பவானும் மற்ற வாநரர்களும், அவரைத் துதித்தனர். உத்ஸாஹத்தோடு ஹநுமார் அட்டஹாஸஞ்செய்கையில மஹேந்த்ர மலையே அசையத் தொடங்கியது. இவ்வாறு ஹநுமாருக்கு ஸமுத்ரத்தைத் தாண்டும் தைர்யம் வந்தவுடன், வாநரர்கள் யாவரும், அவர் போய்த் திரும்பிவரும் வரையில், ராமகார்யம் அவரால் சீக்ரம ஸித்தியாகும்பொருட்டு ஒற்றைக்காலில் நின்று தபஸ் செய்துகொண்டிருப்பதாகத் தீர்மானஞ் செய்துவிட்டார்கள்.

5. ஸுந்தர காண்டம்

கலைக்கடலே கருணைநெடுங் கடலேகானங்
கடந்ததடங் கடலேயென் கருத்தே ஞான
மலைக்கணெழுஞ் சுடரேவான் சுடரே யன்பர்
மனத்தொளிருஞ் சுயஞ்சுடரே மணியே வானோர்
தலைக்கணுறு மகுடசிகா மணியே வாய்மைத்
தசரதன்றன் குலமணியே தமியேனுன்ன
நிலைக்கணுறுஞ் சீராம வள்ளலேயென்
னிலையறிந்தும் அருளவின்னு நினைந்திலாயே.

வினா 1.—இந்தக் காண்டத்திற்கு இப்பெயர் வரக் காரணமென்ன ?

விடை.—இதற்குப் பலர் பலவிதக் காரணங்கள்கூறுவர். ஸ்ரீவால்மீகி இக்காண்டகதையின் அழகைக்கண்டு வியந்து, இதற்கு இப்பெயர் கொடுத்தாகச் சிலர் சொல்லுகிறார்கள். வேறுசிலர் ஸுந்தரம் என்றபதம் நஷ்டத்ரவ்யலாபம் எனப் பொருள்படும் என்றும், இக்காண்டத்தின் முக்ய விஷயம், நஷ்டமான ஸீதையைக் கண்டுபிடித்தலாகையால், இக்காண்டத்திற்கு இப்பெயர் பொருந்தும் என்று எடுத்துக் காட்டுகிறார்கள். மற்றும் சிலர், ஸுந்தர என்ற பதத்திற்குத் தூதன் என்ற பொருள் நிகண்டுவிலிருந்து தெரிய வருகிறதென்றும், இந்தக் காண்டம் ஹநுமாரது உத்தமமான தூதைத் சொல்லுவதாகையால் இதற்கு இப்பெயர் தகும் என்றும் ஸ்தாபிக்கின்றனர். ஸுந்தரம் என்ற மஹா

மந்த்ரத்துக்கு ஹநுமானே தேவதையாய் இருப்பதால், அவருக்கு ஸுந்தரம் என்ற ஒரு பெயர் உண்டென்றும் அவரது சிறப்பைப்பற்றிச் சொல்லும் காண்டமாதலால் இதற்கு இப்பெயர் வந்ததெனவும், விவரிப்பர் சிலர். பாலகாண்டம் பாலராமரைப்பற்றியும், அயோத்யா காண்டம் ஸீதாராமரைப்பற்றியும், கிஷ்கிந்தா யுத்தகாண்டங்கள் வீரராகவரைப்பற்றியும் சொல்லுவதுபோல, இக்காண்டத்தில் ஸுந்தர ராமரைப்பற்றி, ஹநுமார் வாக்கின் வழியாய், அவரது அழகு யாவர் மனத்திலும் பதியும்படி சொல்லி இருத்தலால், இக்காண்டத்திற்கு இப்பெயரே தகுதி என்று வேறு சிலரும், பக்தியே அழகிற் சிறந்ததென்றும் அதை ஹநுமாரது நடத்தையால், இங்கு நன்கு விளக்கிக்காட்டப்பட்டிருப்பதால் இக்காண்டம் ஸுந்தர காண்டம் என்ற பெயரிட்டு அழைக்கத்தக்கது என்று வேறு சிலரும் கூறுவர். இக்காரணங்களுள் கடைசியிற்சொன்னவைகள் பெரும்பாலாலும் அங்கீகரிக்கப்பட்டு வருவன. எப்படி இருந்தபோதிலும் இக்காண்டத்திற்கு இப்பெயர் தகுதியான பெயர் என்பது முன்சொன்னவைகளிலிருந்து எளிதில் விளங்கும்.

வின 2.—ஹநுமார் மஹேந்த்ரமலைச் சிகரத்திலிருந்து வாநரர்களுடைய தீர்மானத்தைக் கேட்டபின்பு என்ன செய்தார்?

விடை.—ஹநுமார் தமது ரூபத்தைப் பெரிதாக்கிக்கொண்டு ஸீதையைக் கண்டுபிடிக்கப் புறப்பட வேண்டும் என்ற தீர்மானத்துடன் ஸகல தேவதைகளையும் ப்ரார்த்தித்துவிட்டு, தமது இரு கைகளையும்

கால்களையும் அந்த மஹேந்த்ர மலையில் அழுத்தி வைத்துத் தமது மூச்சைப் பிடித்துக்கொண்டும், தேகத்தை ஒருவாறு ஒடுக்கிக்கொண்டும் ஆகாயத்தில் கிளம்பி விட்டார். உடனே அவர் வாயுவேக மனோவேகமாய் லங்கைநோக்கிப் போகத்தலைப்பட்டார் போகும் வேகத்தால் ஸமுத்ரமே அல்லோல கல்லோலப் பட்டது. இவ்வாறு ராமபக்தியால் 100 யோஜனை ஸமுத்ரத்தைக் கடக்கத் துணிந்த ஹநுமாரைக் கண்ட தேவதைகள், ஸித்தாள் முதலியோர் புகழ்ந்து பேசினர். தமது வாலை உயர்த்திக்கொண்டு அதிவேகமாய் ஆகாயத்திற் செல்லும் ஹநுமாரை நோக்கினால், பாம்பைத் தூக்கிக்கொண்டு கருடன் பறந்துபோவது போலிருந்தது.

வினா 3.—இவ்வாறு ஹநுமார் போய்க்கொண்டிருக்கையில் அவருக்கு ஸமுத்ர மத்தியில் யார் எவ்வாறு ஸஹாயஞ்செய்தது! ஹநுமார் என்ன செய்தார்?

விடை.—இந்த்ரன் முற்காலத்தில் பர்வதத்தின் சிறகுகளை அறுத்துவருங்கால் மைநாகம் என்ற மலைக்குக் காற்றானது ஸஹாயஞ்செய்து, ஸமுத்ர மத்தியில் எறிய அது மாத்ரம் சிறகை இழக்காமல் ஸமுத்ரத்தில் மூழ்கிக்கிடந்தது. ஹநுமார் ஆகாயமார்க்கமாக வருங்கால், தனக்கு உபகாரஞ்செய்த வாயுவின் பிள்ளை என்று அது அறிந்து அவருக்கு உபகாரஞ் செய்ய எண்ணிற்று. அப்பொழுது ஸமுத்ரராஜனும் ராம கார்யத்தில் அதை ஸஹாயஞ்செய்யும்படி தூண்ட, அது ஹநுமார் வரும் வழியில், தனது சிகரத்தை உயர்த்தி

அவரைத் தன்னிடம் தங்கி, ச்ரமபரிஹாரம் செய்து கொண்டு பின்பு லங்கையை அடையும்படி சொல்லிற்று. ஹநுமார் தாம் அவஸர வேலையாகப் போகிறதாகவும், தம்மால் அங்குத் தங்கமுடியாதென்பதாகவும் சொல்லிவிட்டு, அந்த மலையைக் கையால்தொட்டபின்பு, தமக்கு ஸம்பாதி குறிப்பித்த வழியை விடாது லங்கைநோக்கிச் சென்றனர்.

வின 4·—போகும் வழியில் ஹநுமாருக்கு என்ன தடை உண்டாயிற்று? ஏன்? அவர் அதை எப்படித் தாண்டினர்?

விடை.—ஸுரஸை என்ற ஸர்ப்பங்களின் தாயானவள், தேவர்களின் வேண்டுகோளின்படி ஒரு ராக்ஷஸியின் உருக்கொண்டு, ஹநுமாரை வழியில் தடுத்து அவரது பலத்தையும் புத்தியையும் பரீக்ஷிக்கலானாள். அவள் ஹநுமாரைப் பார்த்து, 'என் வாயுள் நுழைந்து வெளிவந்துதான், நீர் அப்புறம் போக வேண்டும், இல்லாவிடில் நான் உம்மை விடமாட்டேன்' என்று சொன்னாள். உடனே ஹநுமார் தமது உருவத்தைப் பெரிதாக்க, ஸுரஸையும் தனது வாயைப் பெரிதாகத் திறந்தாள். அப்பொழுது ஹநுமார் திடீரென்று கட்டைவிரல் ப்ரமாணமாகி ஸுரஸையின் வாயுட்புகுந்து, வெளியில் வந்து லங்கைநோக்கிப் புறப்பட்டார். ஆகாயத்தில் கூடியிருந்த தேவதைகள் முதலியோர், ஹநுமாரது புத்தி சாதுர்யத்தை வியந்து பேசினர்.

வின 5.—இதன் பிறகு ஹநுமாருக்கு என்ன ஆபத்து வந்தது? அதை அவர் எவ்வாறு நீக்கிக் கொண்டு, பின்பு என்ன செய்தார்?

விடை.—ஸமுத்ரத்தில் வெகு கிழவியாகிய ஸிம்ஹிகை என்ற ஒரு ராக்ஷஸி இருந்தாள். அவள், மேலே போகும்படியான பக்ஷி முதலியவைகளை, அவைகளின் நிழல் மூலமாகப் பிடித்திழுக்கும் சக்தியுடையவள். இந்தச் சக்தியால் ஸமுத்ரத்தி லிருந்தபடி உண்டு, அவள் ஜீவனம் செய்துவந்தாள். அவள் ஹநுமாரைக் கண்டதும அவரது நிழலைப்பற்றி இழுத்து அவரைத் தன் வாயில் விழும்படி செய்தாள். தமது வேகம் திடீரென்று குறைவுபட, கீழே கிடக்கும ராக்ஷஸியைககண்டு ஹநுமார் உடனே தமது தேகத்தைக் குறுக்கிக்கொண்டு அவள் வாயில விழுந்து, அவள் வாயை மூடுமுன உள்ளே தமது சரீரத்தைப் பெரிதாக்க, ஸிம்ஹிகை வாய் கிழிந்து இறந்தாள். உடனே ஹநுமார் லங்கை நோக்கிப்புறப்பட்டு, லங்கைத்தீவை அடைந்து, அங்கோர மலையின்மேல் இறங்கி, ராக்ஷஸர் மனதில் ஸந்தேகம் பிறககாதிருப்பதற்காகத தமது ஸ்வந்தமான சிறிய உருவத்தை எடுத்துக்கொண்டார். இவர் ஸிம்ஹிகையைக் கொன்றதைக்கண்டு, தேவதைகளுக்கு மிகுந்த ஸந்தோஷமுணடாக, அவர்கள் தமது இருப்பிடம சென்றனர்.

வினா 6.—லங்கையுள் ஹநுமார் எவ்வாறு எப்பொழுது ப்ரவேசித்தார் ?

விடை.—இருட்டுகிற வரையில், ஸமுத்ரக்கரையில் ஒரு மரத்தடியில் ஹநுமார் காத்திருந்தார். ராவணன் அறியாது, தாம் எவ்வாறு ஸீதையைக் காணுவது என்பதைப்பற்றி வெகுவாக யோசித்துவிட்டு, அவர் ஸூர்யாஸ்தமனமாகிச் சந்த்ரோதயமானதும்

லங்கையுட் ப்ரவேசிக்க யத்தனஞ்செய்தார். அப்பொழுது லங்கையைக் காக்கும் லங்கிணி என்ற ராக்ஷஸி ஹநுமாரை எதிர்க்க, அவளை அவர் ஒரே அடியில் கீழே தள்ளிவிட்டார். தான் இவ்வாறு ஒரு குரங்கால் அடிபட்டு விழுந்தவுடன், கூடிய சீக்ரத்தில் லங்கைக்கே நாசம் வரும் என்று, முன்னமே ப்ரம்மாவிடமிருந்து கேட்டிருப்பதாக அவள் ஹநுமாரிடம் சொல்ல, அவருக்கு 'ஸீதையை நாம் நிச்சயம் இங்கு கண்டுபிடிப்போம்' என்ற நம்பிக்கை உண்டாயிற்று. இவ்வாறு லங்கிணியை ஹநுமார் ஜயித்து விட்டு, லங்கைக்கோட்டையதிலே ஒரே தாவில் தாவிக் குதித்து, லங்கையுள் தமது இடது காலை முதலில் வைத்தார். (சத்துரு வீட்டில் இடது கால் முன்னே வைத்தால் அவனுக்கு அது அசுபமாம்.)

வின 7.—லங்கையுட் ப்ரவேசித்ததும், ஹநுமார் என்ன செய்தார்?

விடை.—நடுநிசிவரையில், அங்குள்ள ராக்ஷஸர்களது வீடுகள் எல்லாவற்றையும், படுக்கை உள்முதல் சமையல் உள்வரை ஒன்றையும் விடாது, அவர் தேடிக்கொண்டே இருந்தார். அங்கு ராக்ஷஸர்கள் யாவரும் வேதம் ஒதுதலையும் யஜ்ஞ ஹோமாதிகள் செய்து கொண்டிருப்பதையும், பகவத்பூஜைகள் செய்து கொண்டு, ராவணராஜ்யத்தில் மிகுந்த ஸுகமாய் வாழ்வதையும் கண்டு அவர் வியந்தார். 'இந்தத் தர்மாத்மாக்களை ராமர் எவ்வாறு கொல்லமுடியும்' என்ற எண்ணம் அவருக்கு உண்டாகிவிட, ராக்ஷஸர்களது நடத்தைகளை அவர் உற்றுப்பார்த்து, அவர்களிடம்

ஸத்யம்மாத்ரம் இல்லாததைகண்டு, அந்தக் குறை யின் மூலமாக ராமர் அவர்களை எளிதில் கொல்லமுடி யும் என்று தம்மை த்ருப்திப் படுத்திக்கொண்டார். இன்னும் ராத்ரி அதிகநாழிகையாகப் பல வீடுகளில் உள்ள படுக்கையுள் அலங்கோலங்களை ஹநுமார் ஸீதையின் நிமித்தம் பார்க்கவேண்டி வந்தது. இவ் வாறு லங்கை முழுவதும் தேடி ஸீதையைக்காணுத ஹநுமார் மிகுந்த துக்கத்தோடு ராவணனது அரண்ம னையருகில் வந்து சேர்ந்தார்.

வினு ௫.—ராவணனது கோட்டைக்கொத்தளம் முதலியவைகளை ஹநுமார் எவ்வாறு தேடினார்? அங்கு என்னென்ன கண்டார்?

விடை —முதலில் ராவணனது அரண்மனையின் அருகிலுள்ள அவனது சேனாதிபதிகள், தம்பிகள், பிள்ளைகள் முதலியவர்களது வீடுகள் எல்லாவற்றை யும் அவா விடாது முதலில் தேடினார் அங்கு ஸீதை யைக் காணவில்லை. பின்பு ராவணனது அரண்மனையுட் புகுந்து, அங்கு எல்லாவிடங்களிலும் தேடி, ஸீதை யைக் காணுது, அவனது படுக்கையறையில் புகுந்தார் அங்கு ராவணனும் அவன் பெண்சாதிமார்களும் தாம் கிடந்த இடம் தெரியாது, அலங்கோலமாய் உறங்குவ தைக்கண்டார். அப்பொழுது ராவணனுடைய பெண் சாதியாகிய மண்டோதரியைக் கண்டு, அவள் அழகின் மேன்மையால் அவள் ஸீதையாய் இருப்பாளோ என்று சங்கித்து, கொஞ்சகாலம் ஸீதைக்கு வந்த கேட்டை எண்ணித் துக்கித்தார். ஸீதை ராமரைப் பிரி ந்து, இவ்வாறு ஸுகங்களை அநுபவிக்க எப்படி ஒப்பு

வாள்? ஆகையால் அவள் ஸீதையல்ல என்று அதன் பின்பு அவருக்குத் தோன்ற, துக்கம் நீங்கி, அவர் ராவணனது அரண்மனையில் ஒரு இடம் மீதிவைக்காது தேடிவிட்டார். எல்லாம் முடிந்த உடன், அரண்மனையைவிட்டு ஸீதையைக் காணாது வெளியில் மிகுந்த துக்கத்தோடு ஹநுமார் வந்து, 'ஸீதையைக் காணாது ஸுக்ரீவனிடம் சென்று வாநரர்முன் அவமானப்படடு இறப்பதைவிட, எப்படியாவது ராவணனைப்பிடித்து, ராமரிடம் கொண்டுபோவது மேல். இதென்ன! நமக்கு வந்த இடத்தில், இர்மாதிரியான அபஜயம் வந்ததே!" என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்.

வின 9.—இவ்வாறு துக்கித்துக்கொண்டிருந்த ஹநுமாருக்கு என்ன எண்ணம் தோன்றி, ஸந்தோஷத்தை உண்டாக்கியது? பின்பு அவர் என்ன செய்தார்?

விடை.—இவ்வாறு ஹநுமார், ஸீதை இல்லாத இடமெல்லாம் தேடிவிட்டு, வெளியில் வந்ததும், இது வரையினும் தாம் தேடிப் பாராத இடமாகிய ராவணனது அசோகவநம், அவர் கண்ணில்பட்டது. உடனே ஸம்பாதி வார்த்தையும் ஞாபகம்வர, ஸீதை அந்த வநத்துள்தான் இருக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாகி, ஹநுமாருக்கு மிகுந்த ஸந்தோஷத்தை விளைவித்தது. உடனே ஹநுமார் ஓரேதாவாய் வநத்துட்சென்று, எங்கும் தேடிவிட்டு, ஒரு சிம்சுபா விருக்ஷத்தின் மேலேறி இலைகளுள் ஒளிந்துகொண்டு, அங்கு எப்படியாவது ஸீதை ராமரை நினைந்து புலம்பிக்

கொண்டு வருவாள், அப்பொழுது நாம் அவளைப் பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் இருந்தார்.

வினு 10.—அங்கு ஒளிந்து கொண்டிருக்கையில், நிலா வெளிச்சத்தில் ஹநுமார் எதைக் கண்டார்?

விடை.—இவ்வாறு மரக்கிளையில் ஒளிந்துகொண்டு, ஸீதையைக் காணும் ஆவலுடன் சுற்றுமுற்றும் பார்க்கையில், சந்த்ரவெளிச்சத்தில், அருகே ஒரு மரத்தடியில் ஸீதை வெகு சோகத்தோடு, பெருமூச்சுவிட்டுக்கொண்டு தேகம் மெலிந்து, அழகு குன்றி சாம்பலால் மூடப்பட்ட அக்நியைப்போல ப்ரகாசித்துக் கொண்டும், ஸதா ராமரையே எண்ணித் துதித்துக்கொண்டும் இருப்பதை, அவர் கண்டார். சுற்றிலும் ஒற்றைக் கண், ஒற்றைக் காது, இரட்டைத்தலை முதலிய கோரரூபங்களோடு கூடிய ராக்ஷஸிகள் உட்கார்ந்து கொண்டு ஸீதையைப் பயமுறுத்திக் கொண்டிருப்பதையும் ஹநுமார் கண்டார். இவ்வாறு ஸீதையின் அழகையும், கஷ்டத்தையும், ராம பக்தியையும் கண்டதும், 'ராமர் ஏன் இவ்வளவு ஒரு பெண்ணுக்காக அலறுகிறார் என்றல்லவா, முன்னே நான் எண்ணியிருந்தேன். இப்பொழுது, ராமர் இந்த மாதுசிரோன்மணியைப்பிரிந்து, இன்னும் ஏன் உயிர் தரித்திருக்கிறார் என்று எனக்குத் தோன்றுகிறதே,' என்று அவளது குணாதிசயங்களைத் தம்முள்ளே ஹநுமார் புகழ்ந்து பேசினார்.

வினு 11 —இவ்வாறு ஹநுமார் தம்முள் எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில், அங்கு என்ன விசேஷத்தைக் கண்டார்?

விடை.—அந்த ராத்ரி பின்பாகத்தில், ராக்ஷஸர் வீடுகளிலிருந்து வரும் வேதகோஷங்கள் அவர் காதில் பட்டன. இவை தூங்கிக்கொண்டிருந்த ராவணன் காதில் படவும் அவன் தூக்கம் கலைய, அவனுக்கு ஸீதையினிடம் ஆசை அப்பொழுது உண்டாயிற்று. உடனே அவன் எழுந்து, தீவட்டி முதலியவைகளுடன் தன் ஸ்த்ரீகளால் சூழப்பெற்று, அசோகவநம் வந்து, ஸீதையிடம் தனது ஆசையின் அதிகத்தையும், தன்னைப் புருஷனாக அடைவதால் அவளுக்குண்டாகும் மேன்மையையும், ராமலக்ஷ்மணர்களால் ஒன்றும் இனிமேல் செய்யமுடியாது என்பதையும், ராவணன் வெகுவிநயத்துடன் எடுத்துக்காட்டி, எப்படியாவது அவள் தன்னை விவாகம் செய்துகொள்ளவேண்டும் என்று ஸீதையிடம் விண்ணப்பம் செய்துகொண்டான். ஸீதை வெகு பயத்துடன், தன் கால்கள் முதலியவைகளைத் தன் உடம்போடு சேர்த்துக்கொண்டு ஒரு துரும்பைக் கிள்ளி ராவணன் முன்னே போட்டுப் பிறன் பெண்சாதியைக் கவருதல் பாபம் என்றும், ஸூர்யனும் ஒளியும்போல், ராமரோடு ஸம்பந்தப்பட்ட தன்னால், மறுபடி வேறு ஒருவனையும் புருஷனாக எண்ண முடியாதென்றும், ராம கோபத்திற்கு ஆளாகாமல் தன்னை அவரிடம் கொண்டுபோய் விட்டுவிடுவதே அவனுக்கு நலம் என்றும், தன்னை ராமலக்ஷ்மணர்கள் இல்லாத ஸமயத்தில் தூக்கிவந்த ஆண்மை பெற்றவன் ராவணன் என்றும் வெகுவாகப் புத்திமதி உரைப்பவள் போலவும், கோபத்தைக் காட்டுபவள் போலவும், ராவணனைத் துரும்பாக எண்ணி, ஸீதை

பதில் சொன்னாள். இதைக் கேட்டதும் ராவணனுக்கு அடங்காக் கோபம் வர, ஸீதையைக் கொல்ல மனம் வாராதவனாய் 'உனக்கு இரண்டு மாதம் கெடு வைத்திருக்கிறேன். அதற்குள், நீ என் பெண்சாதியாகாத பக்ஷத்தில், உன்னைப் பாகசாலைக்காரர்கள் வெட்டிச் சமைத்து, எனக்குக் காலை உணவாக இட்டுவிடுவார்கள். ஜாக்ரதை' என்று பயமுறுத்தி, சுற்றிலும் இருந்த ராக்ஷஸிகளுக்கு ஸீதை எந்தவிதத்திலாவது தனக்கு வசப்படும்படி செய்யவேண்டும் என்று உத்தரவு அளித்தான். இதற்குப் பிறகு ராவணன் தன்னுடைய ஸ்த்ரீ ஒருவளது வேண்டுகோளின்படி அவளோடு உல்லாஸமாய் தன் அரண்மனை நோக்கிச் சென்றான்.

வினா 12.—ராவணன் இவ்வாறு சென்றதும், ஸீதையைச் சுற்றியிருந்த ராக்ஷஸிகள் என்ன செய்தார்கள்? ஸீதை என்ன செய்தாள்?

விடை.—சிலர் ஸீதையிடம் நயமாய் ராவணனைத் தனது புருஷனாய் அங்கீகரிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். சிலர் ஸீதையின் உறுதியை மூடத்தனமெனக் கருதி, அவளைக் கடிந்துகொண்டனர். சிலர் ராவணனது ஐச்வர்யச் சிறப்பை, அவள் முன்னே வர்ணிக்கலாயினர். சிலர் ஸீதை பிடிவாதமாய் இருப்பது கண்டு, 'அவளைக் கிழித்து நான் காலைத் தின்பேன், நான் கையைத் தின்பேன்' என்று வீர்யம் பேசி ஸீதையைப் பிடிக்கத் தலைப்பட்டு அவளைப் பயமுறுத்தினர். சிலர் ஸீதையை ஈட்டியால் குத்திக் கொன்றுவிடுவதாக, தமது கையிலிருந்த ஈட்டியை அவள் மேலே நோக்கினர்.

இவ்வளவு கஷ்டத்திற்கும் ஆளாகி, ஸீதை பயந்து கண்ணீர் உதிர்த்தபோதிலும், முடிவில் ராக்ஷஸிகளை நோக்கி, 'நான் பரம்பொருளாகிய ராமரது பெண்சாதி, நான் ராக்ஷஸனை ஒருநாளும் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன். என்னைக் கொன்று இப்பொழுதே தின்றுவிடுங்கள்' என்று தைர்யமாய் வாய்விட்டுச் சொன்னாள். இவ்வாறு ஸீதை, இவர்களை லக்ஷ்யம் செய்யாது, தனது கஷ்டத்திலும் ராமரை எண்ணிக்கொண்டிருக்கும் சிறப்பை ஹநுமார் சிம்சுபா விருக்ஷத்தின்மேலிருந்து பார்த்துக்கொண்டே இருந்தார்.

வினு 13.—இவ்வாறு ஸீதை வருந்துங்கால், யார் அவளுக்கு அநுகூலமாய் எவ்வாறு பேசியது? பின்பு அங்கு என்ன நடந்தது?

விடை.—பயந்தும், ஸீதை தனது தைர்யத்தை விடாது இவ்வாறு சொல்லவும், அருகே உறங்கிக் கொண்டிருந்த த்ரிஜடை என்ற ராக்ஷஸி (விபீஷணன் பெண்) திடீரென்று எழுந்து லங்கைக்கும், ராவணனுக்கும், ராக்ஷஸர்களுக்கும், பெரிய ஆபத்து ராமரால் வந்து, பின்பு ஸீதை, ராமரோடு கூடி ஸுகிக்கப் போகும் விஷயத்திற்கு, அநுகூலமாகத் தான் கனாக் கண்டதாகவும், ஆதலால் கூடிய சீக்ரத்தில் ஸீதைக்கு ஸுகம் வரப்போகிறதென்றும், அப்படி வந்தால், தம்மைக் கஷ்டப்படுத்தாது ஸீதை இருப்பதற்காகத் தாம் இதுவரையில் செய்த உபத்ரவத்திற்கு அவளை மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்றும், இதன்மேல்ஸீதையைத் தாம்வருத்தாதிருக்கவேண்டும் என்றும், அவள் தனது எண்ணத்தை வெளியிட்டாள்,

மற்றைய ராக்ஷஸிகள் இதை நம்பாது, ஸீதையை வருத்தத்தொடங்க, அவள் தனது தலைமயிரைக் கழுத்தில் சுற்றி இருக்கிக்கொண்டு இறந்துபோவதாகச் சொல்லிக்கொண்டே, ராக்ஷஸிகளது உபத்ரவம் பொறுக்க மாட்டாமல், ஹநுமார் ஒளிந்துகொண்டிருக்கும் சிம்சுபா விருக்ஷத்தினடியில் வந்து, தன் தலைமயிரைக் கழுத்திலே சுற்றிக்கொண்டாள்.

வினு 14.—இந்த கஷ்ட ஸமயத்தில், ஸீதை விஷயமாய் ஹநுமார் என்ன ஆலோசனை செய்து முடிவில் என்ன செய்தார்?

விடை.—நாமோ வந்ததற்கு ஸீதையின் நிலையைப் பார்த்தாய்விட்டது. இப்படியே நாம் போய் விட்டாலும் விடலாம் ஆனால நாம் போய் ராமனை அழைத்துக்கொண்டு லங்கை வரும்முன், இப்பொழுதிருக்கும் கஷ்டத்தில் ஸீதை இறந்துவிட்டால், நமது ப்ரயத்நங்களால் என்ன ப்ரயோஜனம்? ஆகையால் அவளை எப்படியாவது பார்த்துத் தேற்றிவிட்டுப் போகாமற் போனல், நாம் வந்த கார்யம் முடிவுபெற்றதாகமாட்டாது. மேலும் ராமர் கொடுத்த கணையாழி மோதிரத்தை, நாம் அவளுக்குக் கொடுத்துச் சென்றால், ராமர் வரும் வரையிலாவது அவள் உயிர் தரித்திருப்பாள். இப்பொழுது நாம் திடீரென்று, அவள் முன் சென்று நின்றால், நம்மை ராவணன் அல்லது அவனைச் சேர்ந்தவன். என்று ஸந்தேகித்து, நம்மோடு அவள் பேசாதிருந்தால் என்ன செய்கிறது? ஆகையால் இங்கிருந்து அவள் காதில் படும்படி, முதலில் ராம கதையைச் சொல்லுவோம்; அதன் பின்பு, அவள்

முன் தோன்றுவோம்' என்று ஹநுமார் அந்த மரக் கிளையில் எண்ணமிட்டுக்கொண்டிருந்தார். இதற்குள், ஸீதை அருகிலிருந்த ராக்ஷஸிகள் உறங்குவதை ஹநுமார் கண்டு, ராம கதையை அடியிலிருந்து வரிசையாய் ஸீதைகாதில் நன்றாய்ப் படும்படி சொல்லிவந்து, கடைசியில், தான் ராம கார்யமாய்வந்து ஸமுத்ரத்தைத் தாண்டி அசோகவநத்தில் சிம்சுபா விருக்ஷத்தில் ஒளிந்துகொண்டிருப்பதையும் சொல்லிமுடித்தார்.

வினா 15.—இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஸீதை என்ன செய்தாள்? பின்பு ஹநுமாருக்கும், ஸீதைக்கும் என்ன நடந்தது?

விடை.—உடனே மேலே தலையைத் தூக்கி, ஸீதை நோக்கினாள். அவள் கண் முன் ஹநுமார் தோன்ற, அவரை இன்னும் ராமரைப்பற்றிச் சொல்லும்படி ஸீதை கேட்டாள். அப்பொழுது ஹநுமார் மரத்தை விட்டுக் கீழே இறங்க, ஸீதை ஹநுமாரைக்கண்டு 'கனவோ, நினைவோ, கண்டதும் வீணோ' என்று துக்கித்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது ஹநுமார் சில கேள்விகள் ஸீதையைக் கேட்க, அதற்கு அவள் கொடுத்த பதிலைக்கொண்டு, அவள்தான் ஸீதை என்று தீர்மானித்தார். பின்பு, தான் ராமதூதன் என்று சொல்லிக்கொண்டு, ஹநுமார் ஸீதையிடம் ரஹஸ்யங்கள் பேசுவதற்காகக் கொஞ்சம் அவள் அருகே செல்ல, அவளுக்கு ராவணன்தான் இந்த உருவத்துடன் நம்மோடு பேசவந்திருக்கிறானோ என்ற சங்கை உண்டாயிற்று. தனது சங்கையை அவள் வெளியிட்டு, ஹநுமாரோடு பேசாது வாயைமூடிக்கொண்டு

தனது தலையை வேறுபக்கமாகத் திருப்பிக்கொண்டாள்.

வினு 16.—இதன் பின்பு ஹநுமார் எவ்வெவ் விதமாய் ஸீதைக்குத் தன்மேல் நம்பிக்கை வரும்படி செய்தார்? அவை எவ்வாறு முடிவுபெற்றன?

விடை.—இவ்வாறு ஸீதை சங்கிப்பதைக் கண்டு, ஹநுமார், ராமர் லக்ஷ்மணர் ஸுக்ரீவன் முதலியோர் ஸீதையின் க்ஷேமத்தை விசாரித்துவரும்படி சொன்ன ஸங்கதிகளையும், ராமலக்ஷ்மணர்களது மனோநிலைமையையும் விவரமாக எடுத்துரைக்கார். இதனால் ஸீதைக்குச் சங்கை தெளியாதது கண்டு, ராமாது லக்ஷ்மணர்களைத் தாம் பார்த்தபடி வர்ணித்தார். அப்பொழுது ஸீதைக்கு ஒருவாறு ஸந்தேகம் தெளிந்ததைக்கண்டு, அவளுக்கு ஸந்தேகம் முழுவதும் தெளிவதற்காக, ராமர் கொடுத்த கணையாழி மோதிரத்தை அவளிடம் கொடுத்தார். உடனே, கணையாழியைக் கண்ட ஸீதைக்கு, தன்னையறியாது ஸந்தோஷம் வர, ஹநுமார்மேல், உறுதியான நம்பிக்கை உண்டாயிற்று.

வினு 17.—இவ்வாறு ஸீதைக்கு ஹநுமாரிடம் நம்பிக்கை உண்டானதும், அவருக்கும் ஸீதைக்கும் என்ன ஸம்பாஷணை நடந்தது?

விடை.—அவ்வாறு ஸீதைக்கு ஹநுமாரிடம் நம்பிக்கை வந்ததும், முதலில் ஹநுமார் ராமர் விஷயத்திலிருந்த பக்தியால் ஸமுத்ரத்தைக் தாண்டி வந்ததை வியந்துகொண்டாள். ராமலக்ஷ்மணர்களது யோகக்ஷேமங்களை அவள் கூசாது விசாரித்தாள். அதன் பின்பு, ராமர் தன் விஷயத்தில் ச்ரமம் எடுத்

துக்கொண்டு ராவணன் முதலியோரைக் கொன்று, தன்னை மீட்கவேண்டும் என்ற எண்ணங்கொண்டிருக் கிருரா என்று மிகுந்த ஆவலோடு ஹநுமாரைக்கேட் டாள். அதற்கு ஹநுமார், ஸீதை இருக்குமிடம் தெரி யாது ராமர் சும்மா இருந்தாரே ஒழிய வேறில்லை என் றும், மற்றைய விஷயங்களில் ஸதா ஸீதையை ஞாபகத் தில் வைத்துக்கொண்டு ஏங்கிப் பரிதவித்துக்கொண்டி ருக்கிருர் என்றும், உண்மை உள்ளவாறு உரைத்தார். அப்பொழுது ஸீதை, ராவணன் தன்னை ராமரிடம் கொண்டுபோய் விடுவதில்லை என்றும், தான் அவனு க்கு இரண்டு மாதத்திற்குள் வசமாகாமல் போனுல், தன்னைக்கொன்று தின்றுவிடுவது என்றும் செய்த தீர்மானங்களை, ஹநுமாருக்குச் சொல்லி, ராமரைக் காணும் விஷயமாக ஸீதை அவரிடம் ப்ரலாபித்தாள். அப்பொழுது ஹநுமார் ஸீதையை நோக்கி, 'என் முதுகில் நீங்கள் ஏறிக்கொண்டால், நான் இந்த ஸமுத் ரத்தை ஒரே தாண்டாய்த் தாண்டி இந்த க்ஷணமே உங்களை ராமரிடம் கொண்டு சேர்க்கிறேன்' என்று சொன்னுர். ஸீதைக்குத் தன் சக்தி விஷயத்தில், நம்பி க்கை வரும்பொருட்டு, அவளுக்குத் தமது பெரிய ரூப த்தையும் அவர் காட்டினுர். அப்பொழுது ஸீதை, தான் ஒரு குரங்கோடு தனிமையாய்ப் போவது தகா தென்றும், ராவணனுக்கு இது தெரிய வந்த உடன், அவரை, சேனைகளோடு ஸமுத்ரமத்தியில் எதிர்த் தால், தான் ஒருவேளை ஸமுத்ரத்தில் விழுந்து இற க்க வேண்டியதாக வருமென்றும், அல்லது தன்னை ராக்ஷஸர் பிடித்துவந்து கொன்றாலும் கொல்லுவார்,

அல்லது தன்னை ஒருவரும் அறியாத இடத்தில் சிறையிலிட்டு விட்டாலும் விடுவார் என்றும், மேலும் தன் கணவனைத் தவிர தான் மனப்பூர்வமாக வேறு ஒருவரையும் தொடக்கூடாததலால் தனக்கு வருவதற்கு இஷ்டமில்லை என்றும் சொன்னாள்.

வினா 18.—இவ்வாறு ஸீதை ராமரிடம் அப்பொழுது வரப் பிரியப்படாதது கண்டு, ஹநுமார் என்ன செய்தார்?

விடை.—பதிவிரதா சிரோமணியான ஸீதை சொன்ன சொல்லை, ந்யாயம் என்று அங்கீகரித்து ஹநுமார், ராமருக்குத் தாம் மூலமாய்ச் சொல்லி அனுப்பவேண்டியதாயும், தாம ஸீதையைப் பார்த்ததற்கு அடையாளமாயுமுள்ள விஷயங்கள் ஏதாவது உண்டா என்று ஸீதையைக் கேட்டார். அப்பொழுது ஸீதை, 'ரஹஸ்யமானதாயும், தனக்கும் ராமருக்குமே தெரிந்ததாயுமுள்ள காகாஸுர வ்ருத்தாந்தத்தைச் சொல்லி, சித்ரகூடத்தில் ஒரு காக்கை என் விஷயத்தில் செய்த அபராதத்திற்காக அதன்மேல் ப்ரம்மாஸ்திரப்ரயோகம்' செய்த ராமா! என்னைத் திருடி எடுத்துப்போய் பலவாறாக உபத்ரவப் படுத்தும் ராவணனை ஸம்ஹாரம் செய்ய உமக்கு இன்னும் மனம் விரவில்லையா? என்று தான் ராமரைக் கேட்டதாகச் சொல்லும்படி ஹநுமாரிடம் சொன்னாள். இதன்மேல் ராமர் கொடுத்த கணையாழிக்குப் பதிலாக தன் சிரஸில் சூட்டிக்கொண்டிருந்த சூடாமணி ரத்னத்தையும் ஹநுமாரிடம் கொடுத்து, அதையும் ராமரிடம் கொடுக்கும்படி சொல்லி, 'நீர் இதை ராமர் கையில் கொடுத்து, நான்

சொன்ன கதையைச் சொல்லி, கேட்ட கேள்வியையும் கேட்டால், ராமர் நீர் என்னைப் பார்த்துப் பேசினதாக நம்புவார்' என்று ஹநுமாரிடம் உடனே சொன்னாள்.

வினா 19.—சித்ரகூடத்தில் நடந்த காகாஸுர வ்ருத்தாந்தம் என்ன?

விடை.—ஒருநாள் சித்ரகூடத்தில், ராமரும ஸீதையும் தனிமையாய் இருக்கையில், ராமர் ஸீதை மடியில் தலைவைத்து உறங்கத் தொடங்கினார். அப்பொழுது ஒரு அஸுரன் காக்கை உருவாய் ஸீதையின் தேகத்தைக் கொத்தி வருத்த, ஸீதை தன்னால் இயன்ற மட்டும் காக்கையை ஓட்டப் பார்த்தாள். அது ஸாதாரண காக்கையில்லாததால், அவள் எவ்வளவு ஓட்டியும போகாது மறுபடியும் அடிக்கடி கொத்த, அவள் தேகத்திலிருந்து உதிரம் பெருகியது. எங்கே தான் எழுந்தால், நாதன் நித்ரைக்குப் பங்கம் வருமோ என்று ஸீதை இதைப பொறுத்துக்கொண்டிருந்தாள். இவள் தேகத்திலிருந்து பெருகிய உதிரம ராமர் கழுத்தில் பட, உடனே அவர் எழுந்தார். ஸீதை படும் துயரததையும், அதற்குக் காரணமாகிய காக்கையையும் கண்ட உடன், அவருக்கு மிகுந்த கோபம் ஜனிக்க, அருகிலிருந்த தர்ப்பைப புல்லில் ஒரு பிடியை எடுத்து, அதில் ப்ரம்மாஸ்த்ரததை மந்திரித்துக் காக்கை மேல் விட்டுவிட்டார். அது உலகெங்கும் இந்த ப்ரம்மாஸ்த்ரத்திற்குப் பயந்தோடி, எந்த தேவதையிடத்து அது சரணமடைந்தபோதிலும், தம்மால் ஒன்றும் முடியாதென்றும், அஸ்த்ரவேகம் அடங்கி ஸுகம் பெறவேண்டுமானால் அதை ப்ரயோகித்த

ப்ரபுவையே சரணமடைந்தாலல்லது முடியாதென்றும், அவர் கூற, காகாஸுரன் உலகெங்கும் சுற்றிக்களைத்து 'பரம்பொருளே நீயே கதி' என்று ராமர் காலில் வந்து விழுந்தான். உடனே ராமர் அவனுக்கு அபயப்ரதானஞ்செய்து, தம் அம்பு வீணாய்ப் போகக்கூடாததாதலால் அந்தக் காக்கையின் ஒரு கண்ணைமாத்ரம், தன் ப்ரம்மாஸ்த்ரத்துக்கு இரையாக்கி, காகாஸுரனை மன்னித்தருளினார். காகாஸுரனுக்குத் தலைக்கு வந்த ஆபத்து, ராமர் கருணையால், ஒரு கண்ணை மாத்ரம் கொண்டுபோயிற்று.

வினா 20.—இவைகளை ஸீதையிடமிருந்து அறிந்த பின்பு, ஹநுமார் என்ன செய்ய எண்ணினார்? வேறு என்ன செய்யும்படி நேரிட்டது?

விடை.—ஹநுமார் ஸீதையிடம் விடைபெற்று, ஸமுத்ரத்தைத் தாண்டிப்போய், ராமரிடம் கூடிய சீக்ரத்தில் ஸங்கதிகளைச் சொல்லிவிடவேண்டும் என்ற எண்ணத்துடன், ப்ரயாணத்திற்குத் தயாராகி, ஸீதையிடம் போய்வருவதாக அநுமதி கேட்டார். அப்பொழுது ஸீதைக்கு ஹநுமாரைவிட்டு அவ்வளவு சீக்ரம் பிரிய மனம் வரவில்லை. ஆகையால் தனக்கு ராமர் வருகிறவரையில் உயிர் தரித்திருப்பதற்கு வேண்டிய மனோதிடம் வருவதற்காக மறுநாளும் லங்கையில் தன்னருகே இருந்துவிட்டுப் பின்பு ராமரிடம் போகலாம் என்று ஹநுமாருக்கு ஸீதை உத்தரவு செய்தாள். அந்த உத்தரவைச் சிரஸின்மேல் தாங்கினவராய், ஹநுமார் மறுநாளும் லங்கையில் இருப்பதாகத் தீர்மானித்தார்.

வினு 21.—அப்பொழுது ஹநுமார் போவதற்குள், என்ன செய்வதாகத் தீர்மானித்தார்? பின்பு என்ன செய்தார்?


விடை.—வந்தகார்யம் எல்லாம் முடிந்துபோய் விட்டபடியால், 'மேல் என்ன செய்வது? நமது வரவையும், ராமரது நோக்கத்தையும், ராவணனை நேரேகண்டு தெரிவித்துவிட்டு, இங்குள்ள ராக்ஷஸ ஸேனையின் பலத்தை ஒருவாறு அறிந்துகொள்ளவேண்டும். இது ஒன்று தான் குறை; நம்மை ராவணன் பார்த்துப் பேசுவதற்காக, முதலில் இந்த அசோகவநத்தை அழிப்போம். அப்பொழுது ராவணனது யுத்தவீரர்கள் ஸேனைகளோடு யுத்தத்திற்கு வருவார்கள். அவர்களது பலம் முதலியவைகளை அறியலாம். ராவணனையும் இதனால் காண இடங்கிடைக்கும்' என்று ஆலோசித்து, ஹநுமார் அசோகவநத்தை அழித்து, ராக்ஷஸர்களை வலுவில் சண்டைக்கிழுத்தனர்.

வினு 22.—ஹநுமார் அசோகவநத்தை எவ்வாறு அழித்தனர்? பின்பு அங்கு என்ன நடந்தது?

விடை.—அசோகவநத்திலிருக்கும் செடி மரங்கள் எல்லாவற்றையும் வேரோடு சாய்த்து, அந்த வநத்தின் அழகு எல்லாவற்றையும் அவர் கெடுத்தார். கொஞ்ச நாழிகைக்குள் அந்த வநம், ஒரு வெறும் வெளியாகிவிட்டது. ஆனால் ஹநுமார், ஸீதை உட்கார்ந்திருந்த சிம்சுபா விருக்ஷத்தை மாத்திரம், ஒடித்து எறியவில்லை. இவ்வாறு வநத்தை அழித்து விட்டு, மிகவும் பெரிய ரூபத்தை எடுத்துக்கொண்டு



ஹநுமார் பக்தி பரவசத்தால் கடலைக் கடத்தல்.



ஸீதை அசோக வனத்தில் பட்ட பாடுகள்.

அசோகவநத்தின் வாயிலில் வந்து உட்கார்ந்தார். அதன் பின்பு ராவணனது தேவதாராதனைக்காகக் கட்டியிருந்த உப்பரிகையையும் வெகு சீக்ரத்தில் ஹநுமார் இடித்துத் தகர்த்துவிட்டார். இதைக்கண்ட ஸீதையைச் சூழ்ந்திருந்த ராக்ஷஸிகள், ஸீதையிடம் அந்தக் குரங்கைப்பற்றிக் கேட்டார்கள். அதற்கு அவள், 'மாயாவியான ராக்ஷஸர்களுக்கல்லவோ மாயாவிகளது உருவம் தெரியும்' என்று சொல்லிவிட்டு சும்மா இருந்துவிட்டாள். உடனே ராக்ஷஸிகள் குரங்கின் உபத்ரவம் பொறுக்கமாட்டாமல் ராவணனிடம் சென்று, 'ஒரு குரங்கு ஸீதையிடம் வந்து ரஹஸ்யமாய் ஏதோ பேசிவிட்டுப் பின்பு அசோகவநத்தை அழித்துவிட்டது. ஸீதை உட்கார்ந்திருக்கும் மரம் ஒன்றை மாத்ரம், அது விட்டுவிட்டது. ஸீதை இந்த விஷயத்தில் ஒன்றும் பேசமாட்டேன் என்கிறாள்' என்று முறையிட்டனர்.

வினா 23.—இதைக் கேட்டதும், ராவணன் என்னென்ன செய்தான்? அவனது செயல்களெல்லாம் முறையே எவ்வாறு முடிந்தன?

விடை.—இதைக் கேட்டதும், ராவணனுக்கு மிகுந்த கோபம் வர, முறையே, தன் மந்த்ரி, ப்ரஹஸ்தனது பிள்ளையாகிய ஜம்புமாலி, ப்ரதானிகளின் பிள்ளைகள் எழுபேர்கள், தனது ஸேநாதிபதிகளுள் ஐந்து முக்யமான பேர்கள், தன் பிள்ளையாகிய அக்ஷகுமாரன் ஆகிய இவர்களை அநேக ஸேநைகளோடு ஒருவர் பின்னொருவராய் ஹநுமாரை எதிர்க்கும்படி ராவணன் அனுப்பினான். ஹநுமார், இவர்களோடு

சண்டை கொஞ்சகாலிகை விளையாட்டாகச் செய்து விட்டு, ஜம்புமாலியை ஒரு பெரும்பாறையை எறிந்தும், ஏழு ப்ரதானி புத்ரர்களைத் தமது யுத்த வைசித்ரியத்தாலும், ஐந்து ஸேநாதிபதிகளை ஒரு பெரிய மலையின் கொடுமுடியாலும், அக்ஷகுமாரனைக் காலைப் பிடித்துத் தூக்கிச் சுழற்றி அடித்தும், ஹநுமார் கொன்றார். பின்பு அவர்களோடு வந்த ஸேனைகளை எளிதில் அவர் சின்னாபின்னப் படுத்தினார். ஒவ்வொரு சண்டை முடிந்து அடுத்த ஸேனை வருவதற்குள், ஹநுமார் அசோகவநத்தின் வாயிலில் வந்துட்கார்ந்து சிரமபரிஹாரம் செய்துகொண்டு, தான் இன்றார் என்பதைச சொல்லிக் கர்ஜித்துக் கொண்டிருந்தார். இவ்வாறு குரங்கை எளிதில் ஜயித்துவிடலாம் என்றெண்ணிய ராவணனது எண்ணம், நிறைவேறாமல போயிற்று.

வினா 24.—இவ்வாறு ராவணன் ஸேனைகளும் ஸேநாதிபதிகளும் மாண்டதும், ஹநுமாரை எதிர்க்கும்படி யாரை அனுப்பினான்? இந்தச் சண்டை என்னமாக முடிந்தது? ஏன்?

விடை.—எல்லா ஸேனைகளும் இம்மாதிரித் தோற்றுப்போனதைக் கண்டு, ஸ்வதந்த்ரமாகக் குரங்கோடு சண்டை செய்து, அதைப் பிடித்துக் கட்டிவரும்படி ராவணன் தன் முக்யப் பிள்ளையாகிய இந்த்ரஜித்தை அனுப்பினான். அவன் சில ஸேனைகளோடு வந்து, ஹநுமாரை எதிர்த்துக் கொஞ்சகாலம் வரையில் சண்டையிட்டுவிட்டு, பின்பு ப்ரம்மாஸ்த்ரத்தை ஹநுமாரின்பேரில் ப்ரயோகித்துவிட்டான். ப்ர

ம்மா முன்னமே வேண்டிக்கொண்டிருந்தபடி ஹநுமார் அதில் கட்டுண்டார். மேலும் இதுவே ராவணனைக் கண்டு தூதை வெளியிடுவதற்குத் தக்கவழி என்று அவருக்குத் தோன்றியது. அப்பொழுது மூடத்தனமான சில ராக்ஷஸர்கள் ஹநுமானைக் கயிற்றால் வரிந்துகட்ட, வழக்கப்படி பிரம்மாஸ்த்ரத்தின் கட்டு உடனே தளர்ந்துவிட்டது. அப்பொழுதும் தன் கார்யம் முடிவுபெறுவதற்காக ஹநுமார் கட்டுப்பட்டதுபோலக் கிடந்தார். உடனே இந்த்ரஜித்து, ஹநுமானை ராவணன்முன்பு கொண்டுபோய்விட்டான்.

வினா 25.—ராவணனுக்கும் ஹநுமாருக்கும் அப்பொழுது என்ன நடந்தது? பின்பு என்னவாக அவை முடிந்தன?

விடை.—ராவணன் மிகுந்த கோபத்துடன் குரங்கைப்பற்றிய ஸமாசாரங்களை விசாரிக்கும்படி ஸபையிலிருந்த சிலரை ஏவ, ஹநுமார் அவர்களை லக்ஷ்யம் செய்யாது, ராவணனையே நோக்கிப் பேசத்தொடங்கினார். அப்பொழுது ஹநுமார் ராமரது பராக்ரமச்செயல்களை எடுத்துரைத்து, ராவணன் ஸீதையை ராமரிடம் கொண்டுபோய் விடாமற் போனால், அவர் வாநர ஸேனைகளுடன் லங்கை வந்து, ராக்ஷஸர்களை வேரறுத்துவிடுவார் என்றும், வாநரஸேனையில் தூதாய் அனுப்பிக்கப்பட்டு, ஸமுத்ரத்தையும் லக்ஷ்யம் செய்யாது தாண்டி வந்து, அநேக ராக்ஷஸர்களை ஸேனைகளோடு அழித்த தாம், மிகத் தாழ்ந்த குரங்கு என்றும், பலவாறாகச் சொல்லி

ராவணனைப் பயமுறுத்தினர். அதைக் கேட்டதும், ராவணனுக்கு மிகுந்த கோபம் வர, 'இந்தக் குரங்கை உடனே கொன்றுவிடுங்கள்' என்று அவன் உத்தரவு செய்தான்.

வின 26.—இந்த உத்தரவை, யார் மாற்ற எவ்வாறு ச்ரமப்பட்டது? அதை எம்மாதிரியாக ராவணன் மாற்றினன்?.

விடை—ராவணனது தம்பியாகிய மஹாபக்த சிரோமணியான விபீஷணர், ஸபையில் எழுந்து, ஹநுமாருக்கு ஹிதமாய், 'தூதரைக் கொல்லலாகாது, அது கொடிய பாபம். ஆதலால் அவரை வேறு எந்த விதமாகவாவது மானபங்கம் பண்ணிவிடலாம்' என்று ராவணன் மனம் மாறும்படி வார்த்தைகளைச் சொன்னர். அப்பொழுது ராவணன் அதை அங்கீகரித்து, 'குரங்குகளுக்கு அழகு வால், ஒரு குரங்குக்கு வால் போய்விட்டால், மற்றைய குரங்குகள் அதைத் தம்மோடு சேர்க்கமாட்டா. ஆகையால் இக்குரங்கின் வாலில் துணியைச் சுற்றி நெருப்பை வைத்து ஊரெங்கும் சுற்றி, ஸமமாக அழைத்துவந்து அவமானஞ் செய்து விட்டுவிடுங்கள்' என்று மறு உத்தரவு செய்தான்?

வின 27.—அப்பொழுது ஹநுமார் என்ன செய்தார்? அவரால் எப்படி நெருப்பின் தாபத்தை ஸஹிக்க முடிந்தது?

விடை.—இப்படி ராவணன் உத்தரவு கொடுத்தவுடனே, வேலைக்காரர்கள் ஹநுமாரது வாலில் துணியைச் சுற்றத்தொடங்கினர்கள். அப்பொழுது அவர்

தனது உருவத்தைப் பெரிதாக்கிக்கொண்டேபோய்த் தனது வாலையும் நீட்டத் தொடங்கினார். கடைசியில் ஊரில் உள்ள கந்தைகளால் அவர் வால் மூடப்பட்ட உடன், அதை எண்ணெயில் நனைத்து அதற்கு நெருப்பையும் வைத்துவிட்டு, ஹநுமாரைத் திருட்டு வேவுகாரன் என்று அவமதித்துக்கொண்டே ஊர் வீதி எங்கும் அழைத்துப்போக ஆரம்பித்தார்கள். ஹநுமார் வாலில் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பைக் கண்டதும், ராக்ஷஸிகள் ஸீதைக்கு இதைத் தெரிவித்தனர். அப்பொழுது ஸீதை, ஹநுமாருக்கு நெருப்புக் குளிர்ந்திருக்கவேண்டும் என்று அக்நி பகவானை வேண்டிக்கொண்டாள். ஸீதையின் அநுக்ரஹத்தால் ஹநுமாருக்கு நெருப்பின் வெப்பம் தட்டவே இல்லை. தமது ராமபக்தியால்தான், அக்நியும் இவ்வாறு குளிர்ந்திருக்கிறது என்று எண்ணி, ஹநுமார் ஸீதைக்கும் ராமருக்கும் அப்பொழுது வந்தனம் செய்தார். அதன் பின்பு, ராத்ரி வேளையில் பார்த்த லங்கையைப் பகலில் பார்க்கவேண்டும் என்ற ஆவலுடன், ஹநுமார் அந்த ராக்ஷஸர்களுக்குக் கட்டுப்பட்டவர்போல, ஊரெங்கும் உலாவிக்கொண்டு வந்தார்.

வினா 28.—ஹநுமார் வாலில் இட்ட தீ எப்படி ராக்ஷஸர்களுக்கு விபரீதமாக முடிந்தது?

விடை.—ஊரெங்கும் சுற்றிப்பார்த்து முடிந்த உடன், ஹநுமாருக்குத் தமது கார்யம் முடிந்ததாகத் தோன்றியது. உடனே அவர் ஆகாயத்தில் தமது வால் தீயோடு கிளம்பி, தம்மோடு வந்த காவலாளரான ராக்ஷஸர்களை முதலில் கொன்றார். அதன் பின்பு, தமக்

குக் குளிர்ந்து ஸஹாயமா யிருந்த அக்நி பகவா னுக்குத் தகுந்த உணவு கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்ற, லங்கையே அக்நிக்குத் தகுந்த ஆகாரம் என்று அவர் தீர்மானித்தார். உடனே தன் வாலில் இருந்த நெருப்பை லங்கையிலுள்ள வீடுகளி லெல்லாம் ஹநுமார் வைக்க, காற்றின் ஸஹாயத்தால் அந்த நெருப்புப் பரவியது. அவர், தர்மாத்மாவான விபீஷணர் வீட்டை மாத்ரம் எரிக்காது விட்டுவிட்டு, தமது வால் நெருப்பால் லங்கைமுழுவதையும் கொஞ்ச நாழிகைக்குள் சாம்பலாக அழித்துவிட்டார்.


வின 29.—அப்பொழுது ஹநுமாருக்கு என்ன ஸந்தேகம் வந்து எவ்வாறு தெளிந்தது? பின்பு அவர் என்ன செய்தார்?

விடை.—இவ்வாறு லங்கை முழுவதும் அல்லோல கல்லோலப்பட்டு எரிந்துவருகையில், ஹநுமாருக்கு ஸீதையும் இதில் அகப்பட்டுக் கொண்டுவிட்டாளோ என்ற சங்கை வர, 'ஐயோ! நாம் எந்தக் கார்யத்திற் காக வந்தோமோ, அதைக் கவனியாது இவ்வாறு ஸீதையும் சேர்த்து எரித்துவிட்டோமோ, இனிமேல் நாம் ராமரிடம் என்ன சொல்வது' என்று வெகுவா கத் துக்கிக்கலாயினர். அப்பொழுது, 'ஸீதையை அக்நிபகவான் தொடவில்லை' என்று, ஆகாயத்திலி ருந்த ஸித்தர்கள் ஹநுமாரைத்தேற்ற, அவர் ஸமாதா நம் அடைந்து, உடனே அசோகவநம் வந்து சேர் ந்து, ஸீதை ஒரு குறைவுமின்றி ஸுகமாய் இருப் பதைக்கண்டு ஆநந்தித்தார். அப்பொழுது, ராமர் முதலியவரது வரவைத் தான் வெகு ஆவலோடு எதிர்

பார்த்துக்கொண் டிருப்பதாகவும், தான் ஒரு மாதம் வரையில் உயிரைவைத்துக்கொண்டிருக்கமுடியுமென்பதாகவும், அதற்குள் எப்படியாவது தன்னை வந்து மீட்டுக்கொண்டுபோகும்படி, ராமரிடம் அடிக்கடித் தூண்டவேண்டுமென்பதாகவும், ஸீதைசொல்ல, ஹநுமார் அப்படியே செய்துமுடிப்பதாகச் சொல்லி, அவளிடம் விநயத்துடன் விடைபெற்று, ஸமுத்ரக் கரையிலுள்ள மலையபர்வதம் வந்து, தமது வாலை ஸமுத்ரத்தில் அணைத்தார்.

வி௲ 30.—இதன்பின்பு ஹநுமார் என்ன செய்தார்? அக்கரையிலிருந்த குரங்குகள் என்னென்ன செய்தன ?

விடை.—அந்த மலையிலிருந்து மிகுந்த வேகத்துடன் ஸமுத்ரத்தின் வடகரைக்குத் தாவி, கூடிய சீக்ரம் தமக்காகக் காத்துக்கொண்டிருக்கும் அங்கதன், ஜாம்பவான் முதலியவர்களிடம் வெகு கோலாஹலத்தோடு வந்து சேர்ந்தார். உடனே எல்லாக் குரங்குகளும் ஹநுமாரது ஸந்தோஷத்தைக்கண்டு துள்ளிக் குதித்தன. ஹநுமார் மஹேந்த்ரமலை வந்ததும், அங்கு குரங்குகள் எல்லாம் கூட்டங்கூடி, ஹநுமார் போகும் வழியில், வந்த கஷ்டங்களிலிருந்து தப்பி லங்கையை அடைந்ததும், ஸீதையைக் கண்டதும், ராக்ஷஸர்களோடு யுத்தம் செய்து ராவணனைக் கண்டதும், லங்கையைக்கொளுத்தியதும் ஆகிய திவ்ய கதைகளைக் கேட்டு ஆநந்தித்து, ஹநுமாரைப் புகழ்ந்து பேசினர். இதன்பின்பு குரங்குகள் எல்லாம் கிஷ்கிந்தைநோக்கிப் புறப்பட்டன.



வருணன் சரணாகதி.